உ

கடவுள் துணை.

நாற்கவிராசநம்பியியற்றிய

அகப்பொருளிலக்கணத்திற்கு

இலக்கியமாகிய

# தஞ்சைவாணன்கோவை

## மூலம்

பொய்யாமொழிப்புலவர்
செய்தது

இஃது

கையெழுத்துப்பிரதிகளிற்பாடந்தோறும் பிழை படுகின்றனவற்றைவிலக்கிச் சுத்தபாடமாக வழங்குவிக்கும்பொருட்டுக்குன்றத்தூர் அட்டாவதானி-சொக்கப்பமுதலியார் உள்ளங்கனி நெல்லிக் கனிபோல் அகப்பொருளிற்றோற்றுஞ்சங்கை யெலாந்தீரத்தொல் காப்பியவிதிப்படிசெய்தவுரைக் கிணங்கினதாகச்சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவராகி-புதுவை

**நயநப்பமுதலியாரால்**

பரிசோதிக்கப்பட்ட பிரதிக்கிணங்க

**அ-வீராசாமிநாயுடு**

மருகரான

**வீ- வரதராஜுலுநாயுடு**

அவர்களால்

சற்குணநிதி யச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

# புத்தகவிளம்பரம்

இதனால் சகலருக்குந் தெரிவிப் பதி யாதெனில் சென்னபட்டணம் பீங்கான்கடைக்கடுத்த பாபன்ரேட்டில் -ா அச-வது நெம்பருடைய புத்தக்ஷாப்பிலும், கும்பகோணம் பெரிய கடைத்தெருவிலிருக்கும் உப்புக்கடை நாராயணசாமிநாய்க்கரிடத்திலும், மதுரை புதுமண்டபத்தில் புத்தகவியாபாரஞ் செய்யும் சண்முகபிள்ளையிடத்திலும், திரிசிரபுரம் தேரடிக் கடைத்தெருவிலிருக்கும்- தி சபாபதிபிள்ளையிடத்திலும், பாலக்காட்டில் ஷாப்புக்கடைவைத்திருக்கும் அப்பாவுபிள்ளையிடத்திலும், பலவித் தமிழ்கிரந்தங்களும், அகஸ்தியர்முதலியபெரியோர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்தியசாஸ்திரங்களும், ஆழ்வாராதிகள் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களும், கம்பராமாயணவசனமும், சிலசோதிடசாஸ்திரங்களும், வேண்டியவர்கள் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது நூதனமாயச்சிட்டிருக்கும்
புத்தகங்கள்.

மரணகண்டியென்னும் சோதிஷசாஸ்திரம்
நவக்கிரகசிந்தாமணியென்னும் ஜாதகசூடாமணி
பால்க்கிரகதோஷநிவர்த்தி
ஜீவோற்பத்தி சிந்தாமணி
கணிதாமிர்தமென்னும்-ஜோதிஷசாஸ்திரம்
மார்க்கண்டேயர் சரித்திரஅம்மானை
தேரையர்பெருநூல்காவியம் ௩ரூ
தன்வந்திரிதைலம் ரூ
ஸ்ரீராமர்மகாவிக்தம்

அச்சிட்டுவரும் புத்தகங்கள்.

சுப்பிரமணியர் மெய்ஞ்ஞானம் ரூ
அஸ்வனிதேவர்வைத்தியம் ரூ
தேரையர்கரிசலை ௩ரூ

இங்ஙனம்,
அ - வீராசாமிநாயுடுமருமகன்.
வா-வீரதராஜுலுநாயுடு.

உ

கடவுள் துணை

# தஞ்சைவாணன்கோவை.

(கைக்கிளை.)

(காட்சி) புயலேசுமந்துபிறையேயணிந்துபொருவிலுடன்
கயலேமணந்தகமலமலர்ந்தொருகற்பகத்தி
னயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல்
வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்மலயத்திலே (௧)

(ஐயம்) பாரணங்கோதிருப்பாற்கடலீன்றபங்கேருகத்தி
னேரணங்கோவெற்புறையணங்கோவுயர்பாவலர்க்கு
வாரணங்கோடிதருந்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நீரணங்கோநெஞ்சமேதனியேயிங்குநின்றவரோ (௨)

(துணிவு) மையார்குவளைவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போ
னையாதொழிமதிநன்னெஞ்சமேயினிநம்மினுந்தன்
னெய்யார்கருங்குழற்செம்மலர்வாடினநீலவுண்கண்
கையாலழைப்பனபோலிமையாநிற்குங்காரிகைக்கே (௩)

(குறிப்பறிதல்.)

மண்ணிற்சிறந்தபுகழ்த்தஞ்சைவாணன்மலயவெற்பிற்
பெண்ணிற்சிறந்தவிப்பேதைதன்பார்வைபெருவினையே
னெண்ணிற்சிறந்தவிருந்துயர்நோய்தனக்கின்மருந்தாய்க்
கண்ணிற்சிறந்தவுறுப்பில்லையாவதுங்காட்டியதே (௪)

கைக்கிளைமுற்றிற்று.

(இயற்கைப்புணர்ச்சி)

(இரந்துபின்னிற்றற்கெண்ணல்)

தேங்கியகாதரவாதரஞ்செப்பித்தண்செப்பிணைபோல்
வீங்கியமாமுலைமேவுதும்யாம்விசயக்கொடிமேல்
வாங்கியசாபமுயர்த்தவன்போர்வென்றவாணன்வையந்
தாங்கியமாலனையான்றஞ்சைசூழ்வரைத்தாழ்குழற்கே (௫)

(இரந்துபின்னிலைநிற்றல்.)

செறிவேழவெஞ்சிலைவேடஞ்சைவாணன்றிருந்தலர்மே
லெறிவேலைவென்றகண்ணென்னுயிர்க்கேவியிருண்டறல்போ
னெறிவேயலங்கன்முடித்தலைசாய்த்திங்ஙனிற்பதுதா
னறிவேயறிந்தவுனக்கலாமாளிகையாரணங்கே (௬)

(முன்னிலையாக்கல்.)

வழுதியர்நாமம்வளர்க்கின்றவாணன்றென்மாறைவெற்பிற்
கொழுதியலார்செய்குழன்மடவீர்நுங்குற்றேவல்செயத்
தொழுதியலாயத்தொகுதியொடாடிச்சுனைகுடையா
தெழுதியபாவையைப்போனின்றவாறென்னியம்புமினே (௭)

(மெய்தொட்டுப்பயிறல்.)

நல்லார்விழிபோலிருந்துமளியெனுநாமம்பெற்று
மல்லார்குழலிலமர்ந்திருந்தாலமராரைவெல்ல
வல்லான்வரோதயன்வாணன்றென்மாறைமதுகரங்கா
ணில்லாதிடையுமக்கோபழிசாலநிலைநிற்குமே (௮)

(பொய்பாராட்டல்.)

பருந்தொன்றுகூரிலைவேற்படைவாணன்பரிமளப்பூஞ்
செருந்தென்றுசோலைத்தென்மாறையன்னீர் செழுந்திங்களுங்கண்
முருந்தொன்றுகோபமுகங்கண்டுநாணிமுயன்மறுத்தீர்
மருந்தொன்றுநாடியுன்றேவடமேருவலங்கொள்வதே (௯)

(இடம்பெற்றுத்தழால்.)

படம்பட்டவாளரவல்குலிலேதளைபட்டநெஞ்சம்
விடம்பட்டவாள்பட்டவேதனைதீரவிண்டோய்பொழிலுந்
தடம்பட்டவாவியுஞ்சூழ்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநா
மிடம்பட்டவாரமுலைத்தடந்தோய்தற்கிடமிதுவே (௰)

(வழிபாடுமறுத்தல்.)

தேறுததெவ்வென்றவாணன்றென்மாறைச்செந்தேனருவி
யூறுதகாலத்துமூறுதண்சாரலொதுக்கிடந்தந்
தாருதசோகமுமாற்றுதல்வேண்டுமசோகமெய்தி
மாறுததண்ணளிகூர்மர்வாண்முகமாதவியே (௰௧)

(இடையூறுகிளத்தல்.)

சினதயாமுளரித்திருமாளிகையிற்சிறந்ததென்றென்
னிதயாரவிந்தத்தினிதிருப்பீருகோட்டொருகை
மதயானைவாணன்வருந்தஞ்சைசூழ்வையைநாட்டுறைவோர்
புதயார்தனமென்பதோமதர்வேற்கட்புதைத்ததுவே (௰௨)

(நீடுநினைந்திரங்கல்.)

தமிழ்தங்கியதஞ்சைகாவலன்வாணன்றடஞ்சிலம்பிற்
குமிழ்தங்கியமதிக்கொம்பரன்னீர்குளிர்வெண்ணிலவு
முமிழ்தண்டரளப்பவளச்செங்கேழ்வள்ளத்துள்ளிருக்கு
மமிழ்தந்தருவதென்றோபெருவேட்கையென்னுருயிர்க்கே (௰௩)

(மறுத்தெதிர்கோடல்)

கறையாரிலங்கிலைவேலன்பர்காமக்கடற்கெதிர்ந்தி
நிறையாவரம்பினினிற்பதன்றுநிறைநீருலகை

முறையாமல்வன்கலிமாற்றியவாணன்றென்மாறையினும்
பொறையார்தவஞ்செய்திலேனெஞ்சமேயென்புகல்வதுவே (௰௪)

வரிதுநகைதோற்றல்

எறிதேனலம்புஞ்சிலம்பினெப்போதுமிரந்திவள்பின்
வெறிதேதிரிந்துமெலிந்தனநாமுள்ளமெல்லியற்கு
பிறிதேகொலென்னும்பெருந்தகைதேறப்பெரிதுயிர்த்து
வறிதேமுறுவல்செய்தாடஞ்சைவாணன்வரையணங்கே (௰௫)

முறுவற்குறிப்புணர்தல்

வின்மலைவேலன்னநன்னுதல்வாட்கண்ணிவேட்கையெண்ணு
ளென்மலைவேனென்னுமென்னுயிர்தாங்குமெதிர்ந்தவொன்னார்
மன்மலைவேழந்திறைகொண்டசேய்தஞ்சைவாணன்மஞ்சார்
தென்மலைவேய்வகரும்பெருந்தோளிசிறுநகையே (௰௬)

முயங்குதலுறுத்தல்

வானக்கதிரவன்மண்ணகமாதைமணந்ததன்றோ
நானக்குழலியைநானின்றுபெற்றதுநாவலர்க்குத்
தானக்களிறுதரும்புயல்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
கானக்கடிவரைவாய்விளைநாண்மலர்க்காவகத்தே (௰௭)

புணர்ச்சியின்மகிழ்தல்

மலைநாடுகொண்டவழுதிகண்போல்பவன்வாணனெண்ணெண்
கலைநாடுதஞ்சையர்காவலன்மால்வரைக்கன்னிபொன்னுண்
முலைநாமுயன்றுமுயங்கினமான்முயன்றாலினியைந்
தலைநாகன்மணியும்பெறலாமித்தரணியிலே (௰௮)

(புகழ்தல்) திரண்மாமரகதச்செய்குன்றுகாளென்றுஞ்சேவ்வனநீர்
முரண்மாதவங்கண்முயன்றுசெய்தாலுமுளரிமங்கை
சரண்மாறைவாணன்றமிழ்த்தஞ்சைநாட்டென்றனியுயிர்க்கோ
ரரண்மானனையகண்ணாள்கொங்கைபோறலரிதுமக்கே (௰௯)

இயற்கைப்புணர்ச்சிமுற்றிற்று.

அணிந்துழிநாணியதுணர்ந்துதெளிவித்தல்

நாவியுங்காரகிலாவியுந்தோய்குழலணியஞ்சேல்
வாவியுஞ்சோலையுஞ்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவயற்
காவியுஞ்சேலுங்கமலமுங்காட்டுமின்கண்மலரு
மாவியும்போலினியாரணியாகவணிந்தனனே (௨௰)

பெருநயப்புரைத்தல்

மன்னுவுலகத்துமன்னியசீர்த்தஞ்சைவாணன்வெற்பி
லென்னுவியன்னவிவளிடைமேலிணைகொண்டெழுந்த
பொன்னுணணிகொங்கைபோலவண்டிருங்கள்பொய்கையுண்டோ
நன்னுளரும்பொருதாளிரண்டினுநளினங்களே (௨௧)

தெய்வத்திறம்பேசல்

மன்னியபார்புகழ்வாணன்றென்மாறையின்மாக்களிற்போன்
மின்னியமாமைவிளர்ப்பதென்னேவிசிகூப்பு...ம்மிற்

பின்னரியகாதற்பிரிப்பவர்யாரினிப்பேரருவி
பின்னியமாகவிளமயிலாடுமிரும்பொழிற்கே (உ௨)

பிரியேனென்றல்

வண்கொடியேசெம்மதின்மாறைவரோதயன்வாணனென்று
ஒண்கொடியேனெய்தவிவ்வண்ணநீயிரங்கேலிங்கே
நுண்கொடியேரிடைவண்டிமிர்பூங்குழனாபுரத்தாட்
பெண்கொடியேபிரியேன்றரியேனிம்பிரியினுமே (உ௩)

பிரிந்துவருகென்றல்

சென்றேபகைவென்றதிண்படைவாணன்செழுந்தஞ்சைசூழ்
நன்றேதருவையைநாடனையாய்நமதாருயிர்போ
லொன்றேயெனதுறைபூங்குபர்சோலையினூடொளித்து
நின்றேவருவலிங்கேவிளையாடுகநீசிறிதே உ௪

இடமணித்தென்றல்

மணிபொன்சொரியுங்கவாணன்றென்மாறைமருவினர்போற்
றணிபொன்சொரியுந்தடமுலையாயுயர்சந்தமுந்தி
யணிபொன்சொரியுமருவிபெருஞ்சாரலகத்திவர்தேங்
கணிபொன்சொரியுநின்சாரன்மென்காந்தளங்கையகத்தே (உ௫)

வன்புறைமுற்றிற்று.

(தெளிவு) எத்துக்கமதுணாதேறிநின்றேனையிங்கேதனியே
வைத்தங்ஙகன்றுமறந்துறையார்வறியோர்கவர
முத்துந்துகிருமிரங்குந்தரங்கமுகந்தெறிந்து
தத்துங்கரைவையைசூழ்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே (உ௬)

தெளிவுமுற்றிற்று.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தொடுசொல்லல்

அகிலேந்துகூந்தலொருகையிலேந்தியசைந்தொருகை
துகிலேந்தியேந்துந்துணைச்சிலம்பார்ப்பத்துளிகலந்த
முகிலேந்துபூம்பொழில்சூழ்தஞ்சைவாணன் முந்நீர்த்துறைவாய்
நகிலேந்துபூங்கொடிபோற்செல்லுமாலெனெஞ்சநம்முயிரே (உ௭)

பாகனொடுசொல்லல்

தென்பாற்றிலகமன்னன்றஞ்சைவாணன்றென்மாறைமுந்நீர்
வன்பாற்றிரண்முத்தவண்டலின்மேல்வருமேசமஞ்சி
முன்பார்த்தென்னெஞ்சம்வரும்வழிபார்த்துமுறைமுறையே
பின்பார்த்தொதுங்குதல்காணவலவாவொருபெண்ணணங்கே (உ௮)

பிரிவுழிமகிழ்ச்சிமுற்றிற்று.

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிதுமாயமோவென்றல்.

தீயங்கொலோவெனத்தெவ்வென்றவாணன்றென்மாறைவையைத்
தோயங்கொலோவெனுநேசம்பரல்வைத்துச்சோலைமஞ்ஞை
யாயங்கொலோவெனுமாயத்துள்ளாளிவ்வரிவைபென்ன
மாயங்கொலோநெஞ்சமேமணம்போலிங்குவத்துற்றதே (உ௯)

வாயில்பெற்றுய்தல்

பெருமான்மருந்தொன்றுபெற்றனம்யாநெஞ்சம்பேதுறல்பார்
மருமான்வரோதயன்வாணன்றென்மாறைபணங்கமழ்பூந்
திருமான்முகமலர்ச்சேயரிபாய்க்யல்சென்றுசென்றவ்
வொருமான்கைம்முகமாமலரோடையுலாவருமே (௯௰)

பண்புபாராட்டல்

மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறையில்வாய்த்தவர்கண்
கயலாமெனிற்கயல்கள்ளங்கொள்ளாகருந்தாழளகம்
புயலாமெனிற்புயல்போதுகொள்ளாவிப்புனையிழையா
ரியலாமனைத்தையும்வேறென்னபேரிட்டியம்புவதே (௯௧)

பயந்தோர்ப்பழிச்சல்

அணியுஞ்சுடர்விரிசங்குபங்கேருகமாடகமு
மணியுந்தரமன்னிவாழியரோதஞ்சைவாணன்வெற்பிற்
றணியுந்தொழிலொழித்தின்பமுந்துன்பமுந்தன்பதமே
பணியும்பண்பியெனக்குப்பயந்தாளைப்பயந்தவரோ (௯௨)

கண்படைபெறாதுகங்குனோதல்

வாமக்கலையல்குல்வாணுதலார்தஞ்சைவாணன்வெற்பி
னுமக்கலவிக்கலங்கவர்போதுநடக்களித்த
காமக்கனலவர்கையகல்காலைக்கடும்பனிசூ
ரியாமக்கடலசத்துந்தணியாதினியென்செய்துமே (௯௩)

பிரிவுமிழிக்கலங்கன்முற்றிற்று.

---

இடத்தலைப்பாடு

தந்ததெய்வந்தருமெனச்சேறல்

மன்றும்பொதியினுமாமயில்சேர்தஞ்சைவாணன்வெற்பிற்
றுன்றும்பயிலிளஞ்சோலையின்வாய்ச்சுறவுக்குழையைச்
சென்றுந்துசேல்விழிமின்னைமுன்னூட்டந்ததெய்வநம்க்
கின்றுந்தருநெஞ்சமேயெழுவாழியிங்கென்னுடனே (௯௪)

முந்துறக்காண்டல்

மருவாயசொப்பண்மயிலுருவாய்நென்னல்வாணன்றஞ்சைத்
தருவாய்த்தழைசொய்துதண்புனங்காத்துத்தடங்குடைந்து
திருவாய்மவர்ந்துசிலம்பெதிர்கூயின்றோர்தெய்வதப்பெண
ணுருவாயொருதனியேநின்றதாலென்னுயிர்க்குயிரோ (௯௫)

(முயங்கல்) மாறனரன்றஞ்சைவாணன்வரோதயன்மாறையன்னு
டாணுவிநின்றலர்தாமரையேயத்தடமலர்வா
யாணுதொழுகுசெந்தேனல்லிமேவுமரசவன்னம்
யாணுகிண்டப்பதுவேயென்னபான்மையிருவர்க்குமே (௯௬)

(புகழ்தல்) அரும்பாமள்விற்றனத்தொடொவ்வாயலராமள்விற்
கருப்பாமொழிவத்தனத்தொடொவ்வாய்களியானைசெம்பொன்
றரும்பாரிவாணன்றமிழ்த்தஞ்சையான்றரியாரின்முன்செய்
பெரும்பாவமல்லதுநீர்நின்றபேறல்லிபெற்றிலையே (௯௭)

ஆயத்துய்த்தல்

மேவிக்கலைக்கடலென்புலன்மீனுண்டுமீண்டுவந்தென்
னாவிக்கமலத்தமர்ந்தன்மேனின்னயில்விழிபோல்
வாவிக்கயலுகளுந்தஞ்சைவாணன்வனாயினுடன்
கூவிக்கயங்குடைமின்குயிலாயங்குறுகுகவே (௩௮)

இடந்தலைப்பாடுமுற்றிற்று.

பாங்கற்கூட்டம் (தலைவன்பாங்கனைச்சார்தல்

புனையாழியங்கைப்புயல்வளர்பாற்கடற்பூங்கொடிவாழ்
மனையாகியதஞ்சைவாணனெஞ்ஞான்றுமன்மற்றிங்ஙனே
வினையாதெழுமதிநன்னெஞ்சமேநமக்கின்னுயிரே
யனையானருட்புனல்லனங்கானலமாற்றுதற்கே (௩௯)

பாங்கன்றலைவனையுற்றதுவினாதல்

வலம்புரிபோற்கொடைவாணன்றென்மாறைமழைவளர்பூஞ்
சிலம்புறைசூர்வந்துதீண்டினபோலொளிதேம்பியிவ்வா
றுலம்புனைதோளுநின்னுள்ளமும்வாடியுருகிநின்று
புலம்புவதென்னைகொல்லோசொல்லவேண்டும்புரவலனே (௪௰)

தலைவனுற்றதுரைத்தல்

மலைமுழுதுஞ்சொற்றம்மைவைக்கின்றவாணன் றென்மாறைநண்பா
சிலைமுழுதுஞ்சுற்றமுற்றுமெய்யானிற்பச்சென்னிறத்தே
கோலமுழுதுஞ்சுற்றகூறியவானிருளிப்பவின்றென்
கலைமுழுதும்பட்டதாலொருமான்முடிக்கண்ணியிலே (௪௧)

கற்றறிபாங்கன்கழறல்

திருக்கற்பகமன்னசந்திரவாணன்றடஞ்சிலம்பின்
முருகக்கடவுளையவெற்பாமுகிலும்பிறையுஞ்
செருகக்கிளர்வளைவந்தவோர்பேதைக்குன்சிந்தையெல்லா
முருகக்கலங்கினதிகருமோமற்றுனக்கிதுவே (௪௨)

கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்

மால்யமதம்பொழிமாதங்கவாணன்றென்மாறையன்னார்
சேலார்கருங்கண்ணுஞ்செங்கனிவாயுஞ்சிறியநுண்ணேர்
நூலார்மருங்குஞ்பெருந்தனபாரமுநும்மையன்றி
மேலானவருங்கண்டாலுரையாரிந்தவீரங்களே (௪௩)

கிழவோற்பழித்தல்

சூரார்சிலம்பிற்சிலம்பிமென்னூல்கொண்டுசுற்றவெற்றிப்
போரார்களிறுபுலம்பிநைந்தாங்கொருபூவைகொங்கை
வாராலணைப்பாவருந்தினைநீதஞ்சைவாணன்வெற்பா
வோராழிசூழுலகத்தெவரோநின்னையொப்பவரோ (௪௪)

கிழவோன்வேட்கைதாங்கற்கருமைசாற்றல்

பொறைகொண்டதாமரைப்போதன்னகொங்கையும்பொங்கரிசேர்
கறைகொண்டவேலன்னகண்களுங்கொண்டொருகன்னிதெய்வத்
திறைகொண்டவாணன்செழுந்தஞ்சைசூழுஞ்சிலம்பினின்றென்
னிறைகொண்டவாறறியாதிகழாநிற்றிநீயினின்றே (௪௫)

பாங்கன்றன்மனத்தழுங்கல்

சீதளவாராங்கமழ்தஞ்சைவாணன்சென்மாறையன்னாள்
காதளவாவெங்கடுவளவா யவொளிர்காவியந்தண்
போதளவாவிழியென்னுமென்னுசைப்புறத்தளவா
குதளவாமுலையென்னுமென்னுமினிச்செல்லுவதே (௪௬)

தலைவனொடழுங்கல்

என்மேலன்றவதியாளிக்குநின்செவிக்கென்சொலெல்லாம்
வன்மேலடர்கொங்கைகரணமாத்தஞ்சைவாணன்வெற்பா
கன்மேலறைகின்றமென்முளைபோலுங்கடல்வெதும்பிற்
றன்மேல்விளாவவுண்டோதரைமேலொருதண்புனலே (௪௭)

எவ்விடத்தெவ்வியற்றென்றல்

முகத்திற்பகழியிரண்டுடையார்க்கிடமுரிமுந்நீ
ரகத்திற்பிறந்தவரவிந்தமோவடையார்தமக்கு
மகத்திற்சனியன்னசந்திரவாணன்றென்மாறைவெற்போ
நுகத்திற்பகலனையாய்தன்மையேதுநு வலனக்கே (௪௮)

அவனஃதிவ்விடத்திவவியற்றென்றல்

கனமேகுழல்செங்கயலேவிழிமொழிகார்க்குயிலே
தனமேமுகையென்றனிநெஞ்சமேயிடைதன்பகைக்கு
வனமேயருளியவாணன்றென்மாறைமணிவரைசூழ்
புனமேயிடமிங்ஙனேயென்னைவாட்டியபூங்கொடிக்கே (௪௯)

பாங்கனிறைவனைத்தேற்றல்

மழைவளர்மாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பி
னிழைவளர்வார்முலையேரிளந்தோகையையிக்கணம்போய்க்
கழைவளர்சாரலிற்கண்டனையான்வந்துகாண்பளவுந்
தழைவளர்தாரண்ணலேதணிவாய்நின்றகவின்மையே (௫௰)

குறிவழிச்சேறல்

பாரித்ததிண்மையெம்மண்ணலுண்ணீரொப்பருகினின்று
பூரித்தசெவ்விளநீர்களுந்தாங்கியபூங்கொடிதான்
வாரிதலம்புகழ்வாணன்றென்மாறைவரைப்புனஞ்சூழ்
வேரித்தடம்பொழில்வாய்விளையாடுங்கொன்மேவின்றே (௫௧)

இறைவியைக்காண்டல்

கானேயளகங்கரும்புயலேயியல்கார்மயிலே
மானேவிழிமுகமாமதியே தஞ்சைவாணன்வெற்பிற்
றேனேய்தொடையலச்சேயனையான்சொன்னசேயிழையா
டானேயிவளீதுவேயிடமாகியதண்புனமே (௫௨

இகழ்ந்ததற்கிரங்கல்

கொலைகாலயிற்படைநேரியர்கோனகங்கோடவங்கைச்
சிலைகால்வளைத்துத்திருத்தியவாணன்றென்மாறைவெற்பின்

முலைகால்கொளக்கண்டிளைத்தநுண்ணூலிடைமுற்றிழைகண்
வலைகால்பிணிப்பவந்தார்வருந்தாரலர்மானுழைந்தே (௫௩)

தலைவனைவியத்தல்

தலங்காவலன்றஞ்சைவாணமுந்நீர்பொருந்சண்பொருந்தத்
திலங்கார்வலவடக்கொங்கைவெற்பாவிணைநீலவுண்கட்
பொலங்காயவல்லிகடைந்தப்போதுபுடைபெயர்ந்து
கலங்காதிருந்ததெவ்வாறெம்பிரான்றன்கலைக்கடலே (௫௪)

தலைவியைவியத்தல்

வெங்கோன்மழைபொழிவானவர்போர்வென்றமீனலர்தஞ்
செங்கோன்முறைமைசெலுத்தியவாணன்றென்மாறைவெற்பி
னங்கோன்மெலியங்கிகின்றகாமவெங்கஞ்சினையிப்
பைங்கோன்மணிவளையார்தணியாரல்லர்பார்வைகொண்டே (௫௫)

தலைவன்றனக்குத்தலைவினிலைகூறல்

வளங்கனிமாறைவரோதயன்வாணன்மலயவெற்பா
வுளங்கனிகாதலுடனின்றதானின்னுடலமெல்லாங்
களங்கனிபோலக்கருகிவெண்கோட்டுக்களிறுண்டதோர்
விளங்கனிபோல்வறிதானிறைவாங்கியமென்கொடியே ௫௬

தலைவன்சேறல்

புறங்கூரிருட்கங்குல்போன்றகண்பகல்போன்றபொங்கர்
நிறங்கூர்படைக்கண்ணணிகின்றனளே நிழலைச்சுளித்து
மறங்கூர்களிறதண்ணல்வாணனென்மாறையில்வாணுதலா
ளறங்கூர்மனத்தருளானின்றகாமெனதாருயிரோ ௫௭

தலைவியைக்காண்டல்

பாகையுந்தேனையும்போன் மொழியார்தமிழ்ப்பைந்தொடையும்
வாகையுஞ்சூடியவாணன்றென்மாறைவளமும்வ
னிகையும்போலுமெழிலியைநோக்கியிரங்குபுள்ளுந்
தோகையும்போனின்றவாதனியேயிந்தசோலையிலே ௫௮

கல்வியின்மகிழ்த்தல

யாரும்பர்தம்பதமென்போலவெய்தினரிம்பரம்பொன்
வாருந்துறைவையைசூழ்தஞ்சைவாணன்மலயவெற்பிற்
றேருந்தொறுமினிதாகதமிழ்போன்றிவள்செங்கனிவா
யாருந்தொறுமினிதாயமிழ்தாமெனதாருயிர்க்கே ௫௯

புகழ்தல்

தழல்கண்டதன்னகலிவெம்மையாறத்தன்றண்ணளியா
னிழல்கண்டசந்திரவாணன்றென்மாறைநிழல்பொலியுங்
கழல்கண்டதன்னகதிர்முத்தமாலிகைக்காரிகைநின்
குழல்கண்டபின்னல்லவோவறனிருட்குளித்ததுவே ௬௰

பாங்கியொடுவருகெனப்பகர்தல்

என்காதலிநின்னுடனியம்புகின்றேனிங்கினிவருங்கா
னின்காதலியொடுநீவரல்வேண்டுநிலமடந்தை
தன்காதலன்றஞ்சைவாணன்றென்மாறைத்தண்டாமறைவாழ்
பொன்காதல்கொண்டுதொழுஞ்சிலம்பாரடிப்பூங்குயிலே ௬௧

பாங்கிற்கூட்டல்

என்னூடுநின்றவிளங்கொடியேசங்கமேந்துகுழாந்
தன்னூடுசெல்லுஞ்சலஞ்சலம்போற்றஞ்சைவாணன்வெற்பிற்
பொன்னூடுசெல்லும்புகழ்மணிபோனின்புடையகலா
மின்னூடுநுண்ணிடையாருடனீசென்றுமேவுகவே ௨௰௨

பாங்கற்கூட்டமுற்றிற்று

பாங்கிமதியுடன்பாடு - தோற்றத்தாலாராய்தல்

வண்டலையாயத்துடனயர்ந்தோவன்றி வண்டமிர்பூந்
தண்டலையாரத்தழைகள்கொய்தோதஞ்சைவாணன்வெற்பிற்
புண்டலைவேலினுங்கண்சிவப்பாரப்பொலிந்தனைத்தேன்
கொண்டலைநீர்குடைந்தோவியன்மேனிகுலைந்ததுவே ௨௰௩

ஒழுக்கத்தாலையந்தீர்தல்

திளைக்குந்திரைவேலுனக்குமுன்றோன்றலிற்செம்பொன்வெற்பை
வளைக்கும்பிரான்முடிவைத்ததலாற்றஞ்சைவாணன்மண்மேல்
விளக்கம்புகழ்போல்விளங்குகலாற்செக்கர்விண்பிறைகார்
தலைக்குங்குழற்றிருவேதொழவேதகுந்தன்மையதே ௨௰௪

சுனைநயப்புரைத்தல்

பூட்டியவார்சிலைவீரனைவென்றெப்பொருப்பினுஞ்சீர்
தீட்டியவாணன்றென்மாறையன்னீரிதமிழ்ச்செம்மையுமை
ஊட்டியவாளின்கருமையுந்தானகொண்டுமக்கிங்ஙனே
சூட்டியவாறுநன்றன்றுமுல்லைமாலைசுனைப்புனலே ௨௰௫

சுனைவியந்துரைத்தல்

மறலாயெதிர்ந்தமறமன்னர்வேழமலையெறிவேற்
றிறலார்முருகன்செழுந்தஞ்சைவாணன்றென்மாறைமையை
யறலார்குழலாய்நுதறகுறுவேர்வுமழகுமின்போற்
பெறலாமெனிற்குடைவேனடியேனும்பெருஞ்சுனையே ௨௰௬

தகையணங்குறுத்தல்

குவளைசிவத்துக்குமுதம்வெளுத்தகுறையல்லவே
லவளைமறைத்துன்னைக்காட்டலுமாமலர்த்தேன்குதிக்கத்
தவளைகுதிக்குந்தடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்வெற்பி
லிவளைவரக்கண்டுநீயணங்கேபின்னெழுந்தருளே ௨௰௭

நடுங்கநாட்டம்

பால்போன்மொழிவஞ்சியஞ்சினின்றேனிக்குப்பார்முழுது
மால்போற்புரந்தவன்மாறைவரோதயன்வாணன்வென்றி
வேல்போற்சிவந்துநெரிமுறைகோடியவேந்தன்வெய்ய
கோல்போற்கொடியனவாங்கொலையானையின்கோடுகண்டே ௨௰௮

பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுத்தல்

பொருமணிவெண்டிரைப்பைங்கடல்வங்கம்பொருந்தி முன்பு
தருமணி[illegible]பெற்றணிபவர்போற்சென்றுசார்ந்திருந்து

பருமணிநன்கலப்பாங்கியையீங்கியைப் பாவையைநா
மருமணிவண்டுறைதார்வாணன்மாறைமருவுதுமே ௬௯

ஊர்வினுதல்

புதியேன்மிகவிப்புனத்திற்கியான்றனிப்போந்தனனும்
பதியேதுசெல்லும்படிசொல்லுவீர்படிமேற்படிந்த
மதியேய்சுதைமதில்சூழ்தஞ்சைவாணன்றென்மாறைவையை
நதியேய்சுழிகருப்பழிதீருந்திநல்லவரோ ௭௰

பெயர்வினுதல்

கறைத்தாவியுந்தியகாவிரிவைகியகாலததினுந்
தறைத்தாருவன்னசெந்தண்ணளிவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
வறைத்தாழ்சிலம்பினும்வாழ்யீதென்றிவஞ்சியன்னீ
ருறைத்தாவிழிவதுண்டேற்பெயரோனுமுறைமின்களே ௭௧

கெடுதிவினுதல்

தண்பட்டமேவும்வயற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பிற்
பண்பட்டதேன்மொழிப்பாவையன்னீர்பனைபட்டசைபு
மண்பட்டகோடு மதமபட்டவாயும்வடிக்கணைதோய்
புண்பட்டமேனியுமாய்வந்ததோவொருபோர்க்களிறே ௭௨

ஒழிந்ததுவினுதல்

வனமார்குடிஞைப்பகைக்குறலாமெனவாணன்றஞ்சைப்
புனமார்குளிரிப்புடைப்பொலியாற்கிள்ளைபோயினமீண்
டினமாமெனவந்திவ்வேனலெல்லாம்வவ்வுமென்பதற்கோ
கனமாதருங்குழலீர்மொழியாதொழிகாரணமே ௭௩

யாரோயிவர்மனத்தெண்ணம்யாதெனத்தேர்தல்

தனையாரவண்புகழ்தேக்கியவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
வனை யாதுநும்பதியாதுநும்பேரென்பர்வார்துளககார்
புனையானையம்பொடுபோந்ததுண்டோவென்பரீபூங்கொடியீர்
ருனையாதவென்னென்பராலென்கொலோ விவருட்கொண்டதே ௭௪

எண்ணந்தெளிதல்

யாரோயிவரொன்றறிகின்றிலேமெதிர்ந்தாரைவென்று
வாரோய்கழற்புனைவாணன்றென்மாறைவனையுனைவீ
ருரோதெனமுன்வினவிப்பின்வேறொன்றுரைப்பதெல்லா
மேரோயிவர்பொருட்டாலென்றுதோன்றுமென்னெஞ்சினுக்கே ௭௫

தலைவன்கையுறையேந்திவருதல்

தண்டாமரைமலர்ப்பொன்னையும்பார்மங்கைதன்னையிப்போல்
வண்டார்குழன்மடவார்மணந்தார்சென்றுவாணன்றஞ்சை
நுண்டாதணிபொங்கர்நீழலின்கீழந்நுடங்கிடையார்க்
கண்டாதரவையெல்லாஞ்சொல்லவேநல்லகாலமிதே ௭௬

தலைவனவ்வனைவினுதல்

வல்லாரிளங்கொங்கைவஞ்சியன்னீர் தஞ்சைவாணனைக்கண்
டொல்லலார்களத்தினுடைந்ததுபோலவொருகலைபோர்
வில்லார்கணைதைப்பமெய்சோர்ந்தினம்விட்டுவெய்துயிர்த்துப்
புல்லார்வதுமின்றியேவந்ததோநும்புனத்தயலே ௭௭

எதிர்மொழிகொடுத்தல்

வாக்குந்திறனுங்கணையொப்பீர்தஞ்சைவாணன்மஞ்சு
றேக்குங்குடுமிச்சிறுமலைக்கேதிரிகோட்டிரலை
கோக்குஞ்சரமுங்குருதியுஞ்சோரக்கொடிச்சியங்ங
காக்கும்புனமருங்கேதனியேவரக்கண்டிலமே ௭௮

இறைவனைநகுதல்

மைவாளிலங்குகண்மங்கைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பி
லிவ்வாளிமொய்ம்பரின்றெய்தமெய்ம்மானிளமாந்தளிரின்
செவ்வாளியுங்கொண்டுசேட்சென்றதாலன்றுசீதைகொண்கன்
கைவாளியுங்கொண்டுபோனபொய்ம்மானினுங்கள்ளத்ததே ௭௯

பாங்கிமதியினவரவர்மனக்கருத்துணர்தல்

புனங்காவலன்றிவள்பூண்டதுவாண்டகைபோந்ததுமற்
றினங்காவலின்கலையெய்யவன்றுலிகலாழிவிந்தை
தனங்காவலன்றஞ்சைவாணனன்னாட்டிவர்தங்களிற்று
மனங்காவல்கொண்டதெல்லாங்கண்களேசொல்லுவாய்திறந்தே ௮௰

பாங்கிமதியுடன்பாடு-முற்றிற்று

பாங்கியிற்கூட்டம் - தலைவனுட்கோள்சாற்றல்

வாவுங்கலைவிந்தைகாவலன்வாணனறென்மாறையுனனீ
ரேவுந்தொழிலெனக்கேதியலாததிங்கேநுமக்கோர்
மேவுஞ்செய்குன்றமுஞ்சோலையுமாகப்போன் வெற்பும்விண்ணோர்
காவுந்தரவும்வல்லேனெனையாளுங்கடைக்கண்வைத்தே ௮௧

பாங்கிகுலமுறைகிளத்தல்

நீவேறுரைக்கின்றதென்குறமாதெங்கணேரிழைபோர்
மாவேழவன்படைவாணன்றென்மாறைமன்னியயன்றித்
தாவேதுமில்லாத்தமனியமீதுதலம்புரக்குங்
கோவேயமுத்துவரோவறியோருங்குருவிந்தமே ௮௨

தலைவன்றலைவிதன்னையுயர்த்தல்

மிக்கா நல்லர்மெல்லியன்மாதரின்மேதினிமேற்
றக்காற்புகழ்தஞ்சைவாணன்பிரான்றமிழ்நாடனையாய்
மக்கார்நிகர்குழல்வள்ளிசெவ்வேளுக்குவல்லவையா
மிக்காரணமுணராதென்கொலோநின்றியம்புவதே ௮௩

பாங்கியறியாள்போன்றுவினவுதல்

பொன்னியலூசலும்பொய்தலுமாடியெப்போதுநன்னீர்
மன்னியனீலமுகிததிலமுங்குற்றுவாணன்றஞ்சை
யின்னியலாருமிளமரக்காவினிடம்பிரியாக்
கன்னியர்தாம்பலர்யார்நின்னைவாட்டியகாரிகையே ௮௪

இறையோனிறைவிதன்மையியம்பல்

தாளிணைமாந்தளிரல்குல்பொற்றேரிடைசங்கைகொங்கை
கோளிணைகோலக்குரும்பைகைகாந்தள்கொடிக்கரும்பார்

தோளிணைவேய்முகந்திங்கள்செவ்வாயிதழ்தொண்டைபுன்கண்
வாளிணைவார்குழலாய்வாணன்மாறையெம்மன்னுயிர்க்கே ௮௫

பாங்கிதலைவியருமைசாற்றல்

புகழார்வரையெம்புரவலன்காதற்புதல்வியைநீ
ரிகழாவெளியளென்றெண்ணப்படநீரெமக்கென்றுரைவண்மை
திகழாபரணன்செழுந்தஞ்சைவாணன்சிலம்பினுள்ளீ
ரகழார்கலியுலகிற்புலனானவணங்கவளே ௮௬

தலைவனின்றியமையாமையியம்பல்

வனைந்தாலனகொங்கைமாதருவாய்த்தஞ்சைவாணன்வெற்பிற்
புனைந்தாலனையபுனத்தயல்வாய்வண்டுபோதகத்தே
னனைந்தாலனையவென்னல்வினைதான்வந்துநண்ணிற்றென்று
நினைந்தாலணங்கனையாய்தமியேனுயிர்நிற்கின்றதே ௮௭

(பாங்கிநின்குறைநீயேசென்றுரையென்றல்)

மருப்பாவியதொங்கல்வாணன்றெனமாறைவனசமலர்த்
திருப்பாவையன்னவென்சேயிழையாட்குன்றிருவுளத்து
விருப்பாகியகுறையுள்ளதெல்லாஞ்சொல்லிவேண்டுநீ
பொருப்பாமொழியப்பெறுமோம்மனோரிவைபோல்வனவே (௮௮)

பாங்கியைத்தலைவன்பழித்தல்

வில்லார்நுதல்வெய்யவேலார்விழிக்கென்மெலிவுசொல்ல
வல்லாரிலைசொல்லவல்லையென்றியான்றஞ்சைவாணன்றெவ்வி
னெல்லாதிருநுமக்கென்றுணரேனின்றுணங்கியின்றா
ளெல்லாமிரந்ததுநின்குறையேயல்லவென்குறையே (௮௯)

பாங்கிபேதைமையூட்டல்

தேனுஞ்சுரும்புஞ்செறிதொங்கல்வாணன்றென்மாறைவெற்பா
மானுங்கலையும்வடிக்கணையாலெயதுமன்னுயிரு
மூனுங்கவர்கின்றதன்னையர்போலயிலொத்தகண்ணு
டானும்பிறருள்ளநோயறியாததனகமையளே (௯௰)

காதலன்றலைவிமூதறிவுடைமைமொழிதல்

வருநீர்வனமுலைமங்கைநல்லாய்செங்கைவாணன்வையை
தருநீர்மலிவயற்றஞ்சையன்னாளன்றுதஞ்சமிலே
னருநீர்நவைபுறக்கணமலர்நீர்தெளித்தாற்றினளா
லிருநீர்நிலங்கொள்ளுமோவறியாளென்னுமிவ்வுரையே ௯௧

பாங்கிமுன்னுறுபுணர்ச்சிமுறைமையுறக்கூறல்

செறிவளர்காவிவயற்றஞ்சைவாணன்சிறுமலைமே
னெறிவளர்வார்குழனேரிழையாளன்னநீர்மையளேற்
குறிவளர்காவின்முன்கூடியவாறின்னுங்கூடுகநீ
கறிவளர்சாரல்வெற்பாபிரறுமுலென்னகாரியமே ௯௨

தன்னிலைதலைவன்சாற்றல்

உரைத்தென்பிற வந்தப்பைந்தொடியாகமுறுவிடில்வெண்
டிரைத்திரைதன்கடன்முத்துந்தென்மலைச்சந்துஞ்செழும்பனிநீ

ரனாத்தென்புருகமெய்ப்பிணும்வெப்பமருதினிநின்
வனாத்தென்கருமமெல்லாந்தஞ்சைவாணன்வரையணங்கே ௬௩

பாங்கியுலகியலுணர்த்தல்

விளையகாண்மலர்மெல்லியன்மாதைவிரும்பினையேல்
வளையகாடவரைந்துகொணீதஞ்சைவாணன்முந்நீர்
தளையகாான்மனறககேள்வியர்வேள்வியர்சான்றவர்தம்
முளையகாடிமுன்னிட்டனதாகுமுலகியலே ௬௪

தலைமகன்மறுத்தல்

வெண்டாமனாமங்கைகாதலனாகியவேதியன்பா
லுண்டாகியதொல்லுலகியலாலுங்காளாரணங்கை
வண்டார்குழலிவளைந்துகொள்வேன்றஞ்சைவாணன்வண்மை
கண்டாலருளுள்ளநீயெனதாருயிர்காத்தபின்னே ௬௫

பாங்கயஞ்சியச்சுறுத்தல்

மல்லார்புயன்றஞ்சைவாணன்வெற்பாவெமர்வந்தினியிக்
கல்லார்வியன்புனங்காவல்விடாரவர்காணின்மிகப்
பொல்லாதிருண்டதுபோதும்மற்றியாங்களும்போதுமிங்கு
நில்லாதெழுந்தருணீயுமிப்போதுநெடுந்தகையே ௬௬

தலைவன்கையுறைபுகழ்தல்

சிமையார்மலயத்தமிழ்த்தஞ்சைவாணன்சிறுமலைமே
லமையாகியதடந்தோளன்னமேயணியத்தகுமா
லுமையாளிறைவன்பயில்கயிலாயத்துழும்பர்தங்கு
மிமையாசலத்துமெல்லாமில்லையாணிகரித்தழைக்கே ௬௭

பாங்கிகையுறைமறுத்தல்

மல்குற்றதண்புனல்சூழ்தஞ்சைவாணன்மலயவெற்பா
நல்குற்றவையிந்தநாட்டுளவன்மையினன்னுதலா
ளல்குற்றடத்தெமர்கண்டாலயிர்ப்பரதுவுமன்றிப்
பல்குற்றமும்வருமால்யாங்கள்வாங்கெம்பசுந்தழையே. ௬௮

ஆற்றாநெஞ்சினோடவன்புலத்தல்

உழையும்வெங்காளமும்போலுங்கண்ணுளொருகால்முள்ளங்
குழையுமெம்பாலென்று கொண்டநெஞ்சேசலிக்கோடைமண்மேன்
மழையுமந்தாரமும்வந்தனவாணன்றென்மாறையின்மாந்
தழையுமம்போலிங்ஙனே கவின்வாடத்தவவசெய்ததே ௬௯

பாங்கியாற்றுவித்தகற்றல்

சோலையில்வாழிளந்தோகையன்னாளைத்தொழுகிரந்திம்
மாலையிலவாழிவரங்கொள்வல்யான்றஞ்சைவாணன்வெற்பா
வேலையிலவார்துகிரன்னவெய்யோன்வெயில்வெற்பின்மல்குங்
காலையில்வாபின்னையென்கையதாகுநின்கையுறையே ௭௰

இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன்மடலே

பொருளெனமதித்தல்

திருந்தார்தொழுங்கழற்சேயன்னவாணன்றென்மாறைவெற்பி
னருந்தாவமுதன்னவஞ்சொனல்லாரழகார்குழைதோய்

பெருங்காரைவேல்விழிதந்தவெங்காமப்பிணிதனக்கு
மருந்தாவதுநெஞ்சமேயில்லைவேறுமடலன்றியே ா ௧

பாங்கிக்குலகின்மேல்வைத்துணர்த்தல்

விரையூர்குழலியர்தந்தசிந்தாகுலவள்ளினைக்
கரையூர்பொழுதிளங்காளையர்தாங்கிழிப்பிடித்து
தரையூர்தொறும்பெண்ணைமாமடலூர்வர்தவிர்ந்துபின்னும்
வரையூர்வர்தஞ்சையர்கோன்வாணன்மாறையில்வாணுதலே ா ௨

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்

வன்பணிபோனிலந்தாங்கியவாணன்றென்மாறைவெற்பின்
மின்பணிபூண்முலைமெல்லியலீர்குறைவேண்டியுங்கண்
முன்பணிவேனின்றுநாளைவெண்பூளைமுகிழெருக்கோ
டென்பணிவேன்மடன்மேல்வருவேனினிவ்வென்பணியே ா ௩

பாங்கிதலைமகளவ்வயவித்தருமைசாற்றல்

தொடையேயெருக்கென்புநீயணிந்தாலென்னைசூல்வளையூர்
மடையேய்வயற்றஞ்சைவாணன்வெற்பாமலரோன்வகுத்த
படையேயெலாம்படைத்தபொற்பாவைபடியெடுக்க
விடையேதெனத்தெரியார்துணையாணியிடைவரிதே ா ௪

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்

நறையலராவிரைப்போதிசெயாதிசைநான்முகத்து
மறையலராவந்தமான்மகன்யான்றஞ்சைவாணன்வையைத்
துறையலராவியங்காவியங்கண்ணிதுணிந்துசொல்லுங்
குறையலரார்குழலாட்கினித்தீரக்குறையில்லையே ா ௫

பாங்கியருளியல்கிளத்தல்

செயலார்குடம்பையிற்செந்தலையன்றிற்சினையுளபைங்
கயலார்வனவெண்குருகின்வண்பார்ப்புள்கைக்கடங்கா
மயலார்களிற்றண்ணல்வாணன்றென்மாறைவையைத்துறைவா
வியாலாதருளுடையார்க்கென்றுமாமடலேறுவதே ா ௬

கொண்டுநிலைகூறல்

வெண்டோடணிமுகப்பைங்குரும்பைக்கொங்கைவெய்யவுண்கட்
கண்டோர்விரும்புங்கரும்பனையாளைக்கடற்றுறைவா
கொண்டோர்குறைமுடிகொம்பனையார்நின்குறைமறுத்தால்
வண்டோலிடுந்தொங்கலான்வாணன்மாறைவளநகர்க்கே ா ௭

தலைவியிளமைத்தன்மைபாங்கிதலைவற்குணர்த்தல்

களவரும்பாகநிலங்கள்காமக்கடவுளுமால்
கொளவரும்பாளைங்குரும்பைக்குலஞ்செங்குமுதத்துவெண்
டளவரும்பாநண்பனைதஞ்சைவாணன்றமிழ்வையைநாட்
டிளவரும்பாமிவண்மாட்டென்கொலோநின்றிரப்பதுவே ா ௮

தலைவன்றலைவிருத்திவண்ணமுணர்த்தல்

சிலைபயில்வாணுதன்மின்னேபிறந்தவச்செவ்வியிலே
கொலைபயிலுகக்குவிளையெப்போற்குறியோனிருந்த
கலைபயில்வார்தமிழ்வாணன்றென்மாறைமயிலனையா
அலைபயிலால்விழியாலெனதாவிபணங்கினளே ா ௯

பாங்கிசெவ்வியருமைசெப்பல்

ஒடாரலங்கலிலங்கிலைவேல்வெற்பாவேழுலகும்
வாடாமல்வந்தருள்வாணன்றென்மாறையில்வல்லியன்னாள்
சூடாள்குவளையுமுல்லையுஞ்சூட்டிஞ்சுனையும்பந்து
மாடாளனக்கென்கொலோவடியேன்சென்றறிவிப்பதே ()

தலைவன்செவ்வியெளிமைசெப்பல்

தேன்வந்தவாயிதழ்ச்சேயிழையாயிளஞ்செவ்விநவ்வி
மான்வந்தவாள்விழிவஞ்சிக்குநீதஞ்சைவாணன்வெற்பில்
யான்வந்தவாசென்றியம்புதியேலவர்பாவமொன்று
டான்வந்தவாவுடனேநின்னையாரத்தழீஇக்கொள்ளுமே ()

பாங்கியென்னைமறைத்தபினெளிதென்நகுதல்

மண்ணும்பயில்வித்துமொன்றினுஞ்சந்திரவாணன்வெற்பா
நண்ணும்புனலின்றிபங்குரியாதுவகணல்வினையாற்
கண்ணுங்கருத்துங்கலந்தனவாயினுங்கண்ணினும்மு
ளெண்ணுங்குறையென்னைநீர்மறைத்தாலிங்கியல்வதன்றே ()

அந்நகைபொருளுதவன்புலம்பல்.

வெவ்வேலெறிந்த்விழுப்புண்ணின்மீட்டும்வெதும்பியதோர்
செவ்வேலுழைப்பலசிலமுன்றேதிருவேமருவார்
கைவேலமர்வென்றவாணன்றென்மாறைமயில்பொருட்டா
லைவேலையஞ்சலென்றுதின்னவாறுநகைக்கின்றதே ()

பாங்கிதலைவனைத்தேற்றல்.

தன்கண்ணனையதன்பாங்கியருள்ளுந்தனக்குயிராச்
மென்கண்ணருண்பெரிதெம்பெருமாட்டிக்கிகன்மலைந்தார்
வன்கண்ணமர்வென்றவாணன்றென்மாறையில்வந்தவளாற்
புன்கண்ணடையலைநீயினிவாடல்புரவலனே ()

பாங்கிகையுறையேற்றல்

ஒலிதெண்கடல்புடைசூல்கேழிலுமூழ்வினைதான்
வலிதென்பதனைவயங்கியதாற்றஞ்சைவாணன்வெற்பா
கலிதெங்குமாவுஞ்சமுகும்பலாவுங்கதலிகளும்
பொலிதென்பொதியிலின்மேற்சந்தனடவிப்பூந்தழையே ()

கிழவோனாற்றல்.

மைப்போதணிதொங்கல்வாணனென்றோனவல்வினையேற்
கப்போதடைந்தவருந்துயர்நீங்கியரும்பியபொற்
செப்போகிளருமுலைபாணகைவாண்முகத்திங்களைக்கண்
டப்போதிலங்கியதாலிந்துகாந்தங்கொலென்னெஞ்சமே ()

இறைவன்றனக்குறைநேர்பாங்கியிறை
விக்கவன்குறைப்புணர்தல்.

இருவர்கண்டால்வருமேதமென்றெண்ணியெனக்கெதிரோ
ருருவர்வந்தாலுந்தம்வாய்திறவார்தஞ்சைவாணன்வெற்பி
னொருவர்நஞ்சாரலுழையகலார்தழையுள்ளதெல்லாந்
தருவர்வம்பார்முலையாயென்கொலோசெயத்தக்கதுவே ()

இறைவியறியாள்போன்றுகுறியாள்கூறல்.

கலைதொடக்கிண்டகருவியந்தென்பலகால்கொடுமா
மலைதொடுத்தூர்ந்துவருகின்றதாற்றஞ்சைவாணன்வெற்பிச்
சிலைதொடுத்தாங்கெழில்சேர்நுதலாய்பயில்செம்பழுக்காய்க்
குலைதொடுத்தோங்குபைங்கேழ்ப்பூகநாகக்குழாங்கலந்தே ()

பாங்கியிறையோற்கண்டமைபகர்தல்.

இவாகரனேயன்னபேரொளிவாணன்றென்மாறைநன்னாட்
டுவாமதிபோலுமொளிர்முகத்தாயென்னுளிப்பதுன்மே
லவாவினனாகியோர்மானைவினாவிவந்தானையின்றிக்
கவானுயர்சோலைவிவாய்வண்டலாருழைக்கண்டனமே ()

பாங்கியைத்தலைவிமறைத்தல்

செவ்வண்ணவேல்விழியாய்தஞ்சைவாணன்றென்மாறைநன்னா
ட்டிவ்வண்ணநீசொல்வதேற்பதன்றுனின்னிடையொத்தா
மெய்வண்ணம்வாடிவெறிதேவருந்திவிருந்தினராய்க்
கைவண்ணவார்தழைகொண்டுசென்றார்தமைக்கண்டுகண்டே ()

பாங்கியென்னைமறைப்பவதன்னெனத்தழால்

பரக்கின்றசெவ்விதழ்ப்பங்கயப்பாதம்பணிந்துநின்னை
யிரக்கின்றதொண்டையுமெண்ணலையாலெழுபார்புறம்
புரக்கின்றகோன்றஞ்சைவாணன்பொதியிலிற்பொய்யதென்னைநீ
கரக்கின்றதென்னைகொலென்னுயிராகியசாரிகையே ()

பாங்கிகையுறைபுகழ்தல்.

சூடத்தகுவனவல்லவெல்லாம்படிசொல்லினுந்தாம்
வாடத்தகுவனவல்லநல்லாய்தஞ்சைவாணன்வெற்பர்
தேடத்தகுவனவல்லதல்லாதசிலம்பினுள்ளார்
நாடத்தகுவனவல்லகல்லாரநறுந்தழையே

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தல்.

வனையுங்குழல்வஞ்சிவாணன்றென்மாறைவரைக்களிறு
தினையுந்தழையும்பிடியொடுமேய்ந்துதெளிந்தவின்னீர்ச்
சுனையுண்டசோகமிழற்சோகநீங்கித்துயில்வதுகண்
டெனையுங்கடைக்கணியாவினையாசிற்பரோதிலரோ

மறுத்தற்கருமைமாட்டல்.

கையுந்தழையுமுன்காண்டொறுங்கட்டுரைத்த
பொய்யுந்தொலைந்தனபூந்தழைபோலரிபோர்த்துநஞ்சு

மையுங்கலந்துண்டவாள்விழியாய்தஞ்சைவாணன்வெற்பர்
மெய்யுந்துவண்டதென்னென்முடியாதுவெளிநிற்கவே ௫௨௪

தலைவன்குறிப்புவேறாகநெறிப்படக்கூறல்

விடையான்றிசைவருமேருவில்லானெடுமேழிவென்றிப்
படையானெடும்வெம்பகைகொள்வதோபகல்போலுமெய்ம்மை
யுடையானுயர்தஞ்சைவாணனென்னானனவொல்கியநுண்
ணிடையாய்பிரிதுகொலோவறியேன்வெற்பனெண்ணுவதே ௫௨௫

தோழிதலைவியைமுனிதல்

தூற்றுதலைமறைப்பவர்க்கேகுறைசொல்லுங்குற்றம்
மேற்றுதொழியெனையெம்பெருமாட்டிசென்றேற்றவற்கு
மாற்றுதருள்செங்கைவாணன்றென்மாறையில்வந்துநெஞ்சம்
போற்றுதுநின்றயவேன்சொன்னதீங்குபொறுத்தருளே ௫௨௬

தலைவிபாங்கியைமுனிதல்

மற்றேதவர்வினைவார்தஞ்சைவாணன்வரையின்மூந்நாட்
பொற்றேரின்வந்துபுணர்ந்துசென்றார்தம்பொருட்டுநம்மைக்
கூற்றேவன்மங்கைகுறையிரந்தாளெனுங்குற்றமின்னா
ளெற்றேதவறுநம்பாலில்லையாகவுமெய்தியதே ௫௨௭

தலைவிகையுறையேற்றல்.

ஆற்றுந்தலைவரருந்துயராற்றினுமாற்றலனுண்
மாற்றும்புனையின்மயிலனையாய்தஞ்சைவாணன்றெவ்விர்
போற்றுங்கொடுவினையேன்புனையாவிடிற்போந்தலரோ
தூற்றுந்தழையென்றிதோன்றெங்கனேவந்துதோன்றியதே ௫௨௮

இறைவிகையுறையேற்றமைபாங்கியிறைவற்குணர்த்தல்

பேரியானளித்தலுங்கைகுவித்தேற்றபின்போற்றியன்பாற்
சாயாதகொங்கையின்மேவணைத்தாடஞ்சைவாணன்வெற்பா
காயாமலரன்னமேனிமெய்யாகநின்கையுறையே
நீயாகவல்லதுமாந்தழையாகநினைந்திலளே ௫௨௯

பாங்கிதலைமகற்குறியிடங்கூறல்

அணிமாமலர்ச்சிலைப்புயத்தாணங்கொளாகமெனு
மணிமாளிகைவைத்தவாணன்வண்காவலன்மாறைவெற்ப
துணிமாமரகதப்பாசறைவேலைச்சுடரவன்போற்
பணிமாமணிதிகழும்பகல்யாங்கள்பயிலிடமே ௫௩௰

பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

நாமாவிழுந்திருநறுமலர்குற்றுநந்தாவனத்துத்
தேமாவிளந்தளிர்செவ்வண்ணங்கொய்துசிலம்பெதிர்கூய்
வாமானெடுங்கண்மடந்தைநல்வாய்தஞ்சைவாணன்வெற்பிற்
பூமாதவிப்பந்தர்வாய்விளையாடுகம்போதுகவே ௫௩௧

பாங்கிதலைமகளைக்குறியிடத்துய்த்துநீங்கல்.

கண்சாயல்கையுருக்கொண்டுதன்வேன்மயில்காந்தள்வள்ளி
பெண்சாயவெற்றனையென்றுசெவ்வேள்வரும்பவளம்

வஞ்சாயொசிக்கும்வயற்றஞ்சைவாணன்மலயமுராந்
தஞ்சாயைநின்றன்க்குன்றைநயனிகிற்சசாரலிலே ௱௰௨

இறைவியிறையோனிடத்தெதிர்ப்படுதல்

முயங்கியநூபுரப்புங்கயுஞ்சாளுமுலைசுமந்து
தயங்கியநூவிடைதாளுமென்போலத்தளர்வுறுமிங்
கியங்கியவாறென்மனத்திருணீக்குவென்றேதுணிந்தோ
வயங்கியசீருடையான்வாணன்மாறைமணிவிளக்கே ௱௰௩

புணர்ச்சியின்மகிழ்தல்.

தருந்தாருவஞ்சக்கொடையுடையான்றஞ்சைவாணனின்சொற்
செருந்தார்பசுந்தமிழ்த்தென்வரைமேற்செம்பொன்மேருவெற்பாற்
கருந்தாநஞ்சுமிழ்வாசுகியால்வெண்கடல்கடைந்து
வருந்தாவமுதளித்தாள்வல்லளாமிம்மடக்கொடியே ௱௰௪

புகழ்தல்

மயனூர்விதித்தன்னமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்
பயனூர்பயோதரப்பாவையன்னீர்பசும்பொற்குழைதோய்
நயனாரவிந்தத்துநஞ்சுநும்வாயிதழ்நல்லமுத
மயனூர்புடைத்திலரோலடங்காதவ்வரனுக்குமே ௱௰௫

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்

நேயம்புகலிடமின்றிநின்பால்வந்துநின்றதுபோ
லாயம்புகலவடைந்தருணீயடையாதமன்னர்
வாயம்புகவில்வணக்கியவாணன்றென்மாறைநன்னீர்த்
தோயம்புகுகிணைவேல்விழியாய்நின்றுணையுடனே ௱௰௬

பாங்கிதலைவியைச்சார்ந்துகையுறைகாட்டல்.

பொய்போலிடைநின்விழிபோற்குவளையம்போதிவைநின்
மெய்போலசோகமிளிற்பூந்தழையிவைமெல்லியனின்
கைபோற்கவின்கொள்செங்காந்தளம்போதிவைகண்டருள்யான்
மைபோற்குழலிதந்தேன்றஞ்சைவாணன்வரையினின்றே ௱௰௭

தலைவியைப்பாங்கிற்கூட்டல்

குனிநாண்மதிநுதற்கோகிலமேநின்குழலிலெல்லாப்
பனிநாண்மலருமபறித்தணிந்தேனிந்தப்பார்மடந்தை
தனிநாமகன்றஞ்சைவாணன்றண்சாரற்றனித்துநில்லா
தினிநாமகன்றிளையாற்விளையாடிமெய்துதுமே ௱௰௮

நீங்கித்தலைவற்கோம்படைசாற்றல்.

சின்னுண்மலர்க்குழல்காரணமாச்செவ்விபார்த்துமன்று
பன்னுணாத்தபணிமொழிநோக்கிப்பழிநமக்கி
தென்னுநிடைப்பட்டவெண்ணிலநீமறவேலிறைவா
தன்னுகமெய்ப்புகழான்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே ௱௰௯

உலகியன்மேம்படவிருந்துவிலக்கல்.

வலைப்பெப்தமான்றஞ்சைதேன்றேப்தருந்திமனைமுலைப்பா

தலைப்பெய்தநாளையானறஞ்சைவாணன்சயிலத்தெம்மூ
ரிலைப்பெய்ததாழ்குரம்பைத்தங்கினுமக்கென்வருமே ௱௪௯

விருந்திறைவிரும்பல்

மஞ்சூட்டியன்னசுதைமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்
பஞ்சூட்டியமென்பதயுகத்தீர்ங்கள்பாடியின்மான்
வெஞ்சூட்டிழுதன்னவூனும்பைந்தேனும்விருந்தினர்க்குச்
செஞ்சூட்டிளகுபொன்போற்றினைமூரலுந்தெள்ளமுதே ௱௫௰

பாங்கியிற்கூட்டமுற்றிற்று.

ஒருசார்பகற்குறி.

இழவோன்பிரிந்துழிக்கிழத்தி மாலைப்பொழுது கண்டிரங்கல்.

ஆழ்ந்தார்தமக்கருளாதவர்போலிவ்வளவிலன்பு
சூழ்ந்தாசெலத்தொங்கல்சூழ்குழலாய்சொற்பொருள்படைத்து
வாழ்ந்தார்புகழ்தஞ்சைவாணனைப்பேணலர்மானவெய்யோன்
வீழ்ந்தார்கவிக்கரத்தான்பனிமாலைவெளிப்படவே ௱௫௧

பாங்கிபுலம்பல்.

காலையம்போருகவாண்முகத்தாளன்பர்கையகல
மாலையம்போதுவருவித்தசீர்த்தஞ்சைவாணன்றெவ்வ
ரரலையம்போலுங்களத்தவன்சேயிலழல்கொளுந்த
வேலையம்போழல்வீர்பரிகாவென்றும்வெய்துயிர்த்தே ௱௫௨

தலைவனீடத்தலைவிவருந்தல்.

ஆராதவின்பவிடந்தொறுநீங்கியவாய்மென்பால்
வாராதமுன்னம்வருநிலராற்றஞ்சைவாணன்வெற்பிற்
கூராதரநல்கிவல்வினையேனலங்கொள்ளைகொண்டு
தேராதவனுடனேயென்னெஞ்சுமாலையிற்சென்றவரோ. ௱௫௩

தலைவியைப்பாங்கிகழறல்.

சிறந்தார்தெரிந்தசெழுந்தமிழ்வாணன்றென்மாறைவெற்பர்
துறந்தாரெனையென்றுசோருவதேகனிந்தத்தொல்லுலகிற்
பிறந்தாரெவர்க்கும்பிரிவெய்துமால்வெய்யபேரமர்க்கட்
புறந்தாழ்கரியகுழற்செய்யவாயையபூங்கொடியே. ௱௫௪

தலைவிமுன்னிலைப்புறமொழிதல்.

பூவலர்வாவியினீரற்றபோதுற்றபுன்மையல்லாற்
காவலர்காமந்துறக்கிலென்னுங்கடப்பாய்மதுகை
மாவலவாணன்வயற்றஞ்சைவேந்தனைவாழ்த்தல்செய்யார்
மேவலர்போலுங்கழற்றுணையாளாவியனறிவே. ௱௫௫

பாங்கியொடுபகர்தல்.

முலையார்முயக்கினுமல்லாவிடத்தினுமுரிமுங்கீ
நிலையாரமுதமுஞ்சமும்போலவனைநனையாய்

தொலையாதவின்பமுந்துன்பமுங்காட்டுவர்தூங்கருவி
மலையாசலத்தமிழ்தெவ்வர்வாணன்மாறைநன்மன்னவரோ. கசஎ

பாங்கியைச்சுருத்தல்.

பேணற்கரியநின்பெண்மையுநாணும்பேணியவர்க்கு
காணத்தகுமென்றுகாண்பதல்லாற்கழிகாதனெஞ்சில்
பூணத்தருகினும்பொற்பல்லவாகுதல்கற்பல்லவால்
யாணர்த்தமிழுடையான்வாணன்மாறையினின்னமுதே. கசஅ

நீங்கற்கருமைதலைவிநினைத்திரங்கல்.

குன்றுகிபபொன்னும்வேழக்குழாமுங்கொடைபுகழ்ந்து
சென்றோர்முகக்குஞ்செழுந்தஞ்சைவாணன்றென்மாறைவெற்பிற்
னன்றுமிலாறவற்குநன்றியிலேற்குமுன்னுன்முகத்தோ
டொன்றுவிதித்திலனேயுயிர்போலவுடம்பையுமே. கசகூ

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

நெஞ்சுகவாய்மலரன்னகண்ணீர்மல்கநின்றவஞ்சொற்
கிஞ்சுகவாய்வஞ்சிகேட்டருணீயுங்கிளத்தமிழோர்
தஞ்சுகவாய்மொழிநெஞ்சுடையான்றஞ்சைவாணன்வெற்பின்
மஞ்சுகவார்த்தவாவவர்தேரின்மணிக்குரலே. கருய

சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

தொடைக்கணியார்தடந்தோளவர்கேளலர்தோகையன்னா
ருடைக்கணிபார்ந்தழைகொய்யாருமுவருடைத்ததெண்ணீர்
மடைக்கணியாரமிடுந்தஞ்சைவாணன்வனாயின்முன்போற்
கடைக்கணியார்கணியாரம்மையானைக்கருங்கணியே கருக

முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தல்.

பயில்களைப்பந்திப்புயலன்னவோதியைப்பைங்கிளிகாண்
மயில்காள்சிறிதுமறக்கப்பெறீர்தஞ்சைவாணன்வெற்பிற்
குயில்காளமெங்குமியம்புதண்சோலையிற்கூடியின்ப
மயில்காளவெங்கதிர்வேலன்பர்சாலவயர்ப்பினுமே கருஉ

முன்னின்றுணர்த்தல்

கானங்கான்மலர்க்கள்வாய்க்கருங்கணிகட்டுரையாற்
கானலஞ்சாய்பொற்குரலுங்கொய்தாமெமர்சொற்றவயர்
மேனலங்காவலுமின்றோவொழிந்தனமேழ்புவிக்குத்
தானலந்தாரமன்னன்றஞ்சைவாணன்றமிழ்வெற்பிலே கருங

முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றல்.

கனஞ்சாய்நல்கியகையுடையானெதிர்கன்றினர்தம்
மனஞ்சாயவென்றருள்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்
சினஞ்சாலும்வேலன்னகண்ணாய்நம்வேவெய்மைச்செவ்வியிரு
தினஞ்சாயினுமினிநின்னையல்லாதில்லைக்காழ்குழற்கே கருச

இழவோனஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தல்

ஏவலரோப்பிழிமாந்தளிர்மேனிபரோனினிக்
காவலர்மனைகாத்தம்பாங்கனியானைசெய்பொ

ஞவலரோபெறநற்குங்கைமேசநறுங்குவளை
மாவலரேய்தொடையான்றஞ்சைவாணன்வரையில்வந்தே ௱௫௫

ஒருசார்பகற்குறிமுற்றிற்று.

## பகற்குறியிடையீடு.

இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கல்

புனமும்பசுந்தினைச்செங்குரலேந்துட்புகன்றகிள்ளை
யினமுங்குழீஇவுந்தினைகொள்ளுமாலினையார்வளையு
மனமுங்கவர்வெற்பவாணன்றென்மாறைமடப்பிடியு
மனமுந்தொழுநடைபாற்பலவால்வருமன்னையுமே ௱௫௬

இறைவியைக்குறிவரல்விலக்கல்.

நந்துசுற்றுங்கடன்ஞாலமெல்லாம்புகழ்நாமன்வளர்
சந்துசுற்றுங்கொங்கைமங்கையர்வேள்சஞ்சரீகநறை
வந்துசுற்றுந்தொங்கல்வாணன்றென்மாறைவரையின்மலர்
கொந்துசுற்றுங்குழலாய்செல்லனீயக்குளிர்பொழிற்கே ௱௫௭

இறைமகளாடிடநோக்கியழுங்கல்.

அருவித்தடமுமணிமுத்தயாறும்வனியெங்குந்
திருவித்தியதஞ்சைவாணன்சிலம்புமிச்சிற்றிலும்பே
ரிருவிப்புனமுமின்றென்னினைக்கின்றனவென்னையின்னே
மருவிப்பிரிபவர்போலில்லையேமன்னனில்வன்கண்ணரோ ௱௫௮

பாங்கியாடிடம்விடுத்துக்கொண்டகல்

உன்னையராவல்குலெல்லோமியன்றுசார்வினங்கண்
மன்னையராமல்வகுத்தாணிதஞ்சைவாணன்வெற்பி
னென்னையராணைகொண்டேகுகின்றேனிவைபித்தனையும்
பின்னையரர்தொழிவாயிதணேயிதுபெற்றனமே ௱௫௯

பின்னுணெடுந்தகைகுறிவயினீடுசென்றிரங்கல்.

நான்காணிகரின்படமயில்காடஞ்சைவாணன்வெற்பிற்
றேன்காணினாமென்சிறைக்கிள்ளைகாளென்றெருமரனேய்
தான்காணியகொலிச்சந்தனச்சோலையைத்தன்னையின்றி
யான்காணியகொலெழுந்தருளாததின்றென்றுயிரோ ௱௬௰

வறுங்களநாடிமறுகல்

செங்கேழ்விழிக்குமொழிக்குப்பைகிருப்பார்நடலும்
பங்கேருகமும்பயந்தனவாயினும்பைங்கிளிகாள்
சங்கேய்தடந்துறைசூள்தஞ்சைவாணன்றரியலர்போ
லெங்கேயினித்தங்குவாரோனல்காத்திங்கிருந்தவரோ ௱௬௧

குறுந்தொகுவாழுமூர்நோக்கிமதிமயங்கல்.

பெறவரிதால்வள்பின்சென்றநெஞ்சமுபேணலர்க்கு
மறவரிதானன்னவாணன்றென்மாறவரைப்புனஞ்சூழ்
நறவரிதாழ்முல்லைகாண்மலரோதிநகருமெனக்
குறவரிதாமென்செய்வேனென்றுசோருமென்னேருயிரோ ௱௬௨

பகற்குறியிடையீடு முற்றிற்று.

உ

## இ ர வு க் கு றி.

இறையோளிருட்குறிவேண்டல்

கருவிருந்தெண்டிசையுங்கனமாமழைகான்றதுள்ளம்
வெருவிருந்தெம்பதிக்கேகவொண்ணாதுவிதம்விதமாய்
வருவிருந்தென்றும்புரந்தருள்வாணன்றென்மாறையன்னீ
ரொருவிருந்தெங்களைப்போலெய்துமோகக்குலுங்களுக்கே ௱௯௩

பாங்கிநெறியினதருமைகூறல்

மலைமாதுவல்லவள்வாணன்வரோதயன்மாறைவெற்பிற்
சிலைமாலூறுமெங்குந்தியுமிழாநிற்குஞ்சிங்கமெங்குங்
கொலைமாகரியினைத்தேர்ந்துழலாநிற்குங்கொற்றவபொற்
கலைமானுறைபதிநீவருமாறென்கொல்கங்குலிலே ௱௯௪

இறையோனெறியினதெளிமைகூறல்.

வடிவரிநீள்கண்ணியஞ்சலம்பாந்தஞ்சைவாணன்வெற்பிற்
கொடிவரிகேழற்குழாம்பொருசொல்லையுங்குஞ்சரந்தேர்ந்
தடிவரிதாவுமடுக்கமுஞ்சூர்வழங்காறுமைவாய்க்
கடிவரிநாகந்தலர்மல்குகல்லலைக்கானமுமே ௱௯௫

பாங்கியவனாட்டணியியல்பாங்கிசாறறல்

பூந்தழையாதுமலைமலர்யாதுபுனையிழையுஞ்
சாந்தமும்யாதுநடம்பொழில்யாதுதரணியின்மேன்
மாந்தரில்வேள்ன்னவாணன்றென்மாறைவளநகர்சூழ்
தேந்தருசோலைவெற்பாவுங்கணாட்டுறைசெல்வியர்க்கே ௱௯௬

கிழவோனவனாட்டணியியல்வினாதல்

எந்நாட்டவரணிகூறியென்பேறிங்கிகல்வடிவேன்
மைந்நாட்டவெண்முத்தவாணகையாய்தஞ்சைவாணன்மென்மே
லுந்நாட்டரிவையராடிடஞ்சாந்தமொளியிழைபூ
மொய்ந்நாட்டழையொடெல்லாமொழியாமன்மொழிஎனக்கே ௱௯௭

அவற்குத்தன்னாட்டணியியல்பாங்கிசாற்றல்

வகைகொண்டமாந்தழைகாக்தளம்போதுமறுப்பின்முத்தந்
தகைகொண்டசந்தனச்சாந்தணிந்தாடுவர்தஞ்சையர்கோன்
மிகைகொண்டதெவ்வனாவென்கண்டவாணன்வெற்பாவெமநூர்
நகைகொண்டவல்லியன்னாரெல்லிநாகநறுநிழலே ௱௯௮

இறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தல்.

புயலேறதிர்தொறும்பொங்குளைமீதெழப்போதகந்தோர்ந்
தியலேறதிருமிருங்கங்குல்வாய்முத்தமீன்றுசங்ம்
வயலேறனையநின்பால்வரல்வேண்டினர்காதலரோ
சயலேறனையநின்பால்வரல்வேண்டினர்காதலரோ ௱௯௯

நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தல்.

விடவார்கணைவிழிமெல்லியன்மாதனைமேதினியோர்
ம டவாரொணுமுனைவாய்மைநெஞ்சேதஞ்சைவாணன்வெற்பிற்
கடவாரணந்திரிகங்குனங்கண்ணன்காதலர்முட்
படவார்சிறுநெறிவாய்வரல்வேண்டினள்பெண்ணணங்கே ௨௱

வயலேறக்கன்பனாதடித்தஞ்சைவா
ணன் மெல்லியக்கொடியின்

நேரிழைபாங்கியொடுநேர்ந்துரைத்தல்.

வெங்குலவாரணமேற்றவர்க்கேநல்கிவேற்றரசர்
தங்குலவாழ்வுதவிர்த்தருள்வாணன்றமிழ்ச்சிலம்பிற்
கங்குலவாவினர்காதலராயிற்களிப்பயந்த
கொங்குலவாவலர்சூழ்குழலாயென்கொல்கூறுவதே ௱௭௧

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல்.

பரவாதவண்ணம்பரவியும்பாதம்பணிந்துநெஞ்சங்
கரவாதுபொன்னையின்காரணமாகக்கைகலையென்றே
வரவாதவன்னஞ்சும்வெண்மாளிகைத்தஞ்சைவாணன்வெற்பா
விரவாதவண்ணமெல்லா[illegible]ரிர்தேனிவ்விரவிடையே ௱௭௨

குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்.

மாகந்தரியலர்க்கீந்தருள்வாணன்றென்மாறைவெற்பின்
மேகந்தருமின்னிடையன்னமேவினைநாண்மலர்வேய்
நாகந்தழுவுங்குடம்பையின்வாய்நடுநாளிரவிற்
சோகந்தவிர்விலவாய்த்துயிலாதவென்றோகைகளே ௱௭௩

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

கந்தாரநாளுங்கனிந்தசொல்லாய்நங்கடிமனைக்கே
வந்தாரவாவின்பெருமையினாற்றஞ்சைவாணன்வெற்பிற்
கொந்தாரசோகந்தருஞ்செழும்போதுங்கொழுந்தழையுந்
தந்தாரகலந்தழீஇயகலாதுதணந்தவரோ ௱௭௪

அவட்கொண்டுசேறல்.

மின்னேயயிலொடுமின்விளக்காவந்தவெற்பனைநாம்
பொன்னேயெதிர்கொளப்போதுகம்வாபுவியேழினுக்குந்
தன்னேயம்வைத்தருள்சந்திரவாணன்றமிழ்ச்சிலம்பி
னின்னேரியன்மயில்கண்டுயிலுகின்மலகத்தே ௱௭௫

குறியுய்த்தகறல்.

மந்தாரமன்னகைவாணன்றென்மாறைமயிலனையாய்
நந்தாவனப்பொய்கைநான்கொய்குவேன்குழலுனுங்கன்குல்
கொந்தார்தெரியனின்செங்கனிவாயொடுங்கொங்கையொடும்
பைந்தாமரையையுஞ்சேதாம்பலையும்பகைப்பித்ததே ௱௭௬

வண்டுறைதாரோன்வந்தெதிர்ப்படுதல்.

முதிராமிலையிப்பனியந்தகாரமுனியவலல
கதிராயிரமில்லையேழ்பரித்தேரில்லைக்காவல்வெய்யோற்
கெதிராதல்சோமற்கியைவதன்றேநம்மில்யார்திறந்தார்
மதுராபுரித்தமிழ்தேர்வாணன்மாறை[illegible]த்துவந்தே ௱௭௭

பெருமகளாற்றினதருமைநினைந்திரங்கல்.

செழியன்கயலைத்திசைவைத்தவாணனறென்மாறையென்மேற்
கழியன்புடையநின்காலகண்களாவக்கராம்பயிலுங்
குழியன்றியும்வெஞ்சுழியொன்றும்யாறுங்குழீஇ[illegible]கொடிதாம்
வழியன்பநீபெங்ஙனே[illegible]தவாறிம்மழையிருளே ௱௭௮

புரவலன்றேற்றல்.

வெயிலுந்தரவிந்தமென்மலரன்னமும்விந்தைவெற்றி
மயிலுமபயில்புயன்வாணன்றென்மாறைநின்வாள்விழிபோ
லயிலுங்குயின்மொழிநின்னிடைபோன்மின்னுமாடளிகள்
பயிலுந்தொடைநின்குழல்போலிருளைப்பருகினவே ௱௭௯

புணர்தல்.

சுழிநீரலைகடற்றெல்லுலகேழினுந்தோற்றும்வண்மைக்
கழிநீடுமாடகமேருவின்மீதினுங்காவல்கொண்டு
வழிநீள்புகழ்மொண்டவாணன்றென்மாறைவரையின்மலர்ப்
பொழினிழலும்பரமுதனையரணைப்புணர்ந்தனமே ௱௮௰

புகழ்தல்.

மண்ணார்பெரும்புகழ்வாணன்றென்மாறைவரையின்மலர்ப்
தண்ணா[illegible]முங்கமழ்சார்வருஞ்சாரலிற்சார்ந்துறையும்
பெண்ணாரணங்கன்னநின்முகந்தரன்கண்டபின்னுமுண்டோ
கண்ணார்தடங்களின்வாயொடுங்காதகமலங்களே ௱௮௧

இறைமகளிறைவனைக்குறிவிலக்கல்.

மூரற்கதிர்முத்தவார்முலையாவிமூழ்கத்தனியே
வாரற்கநீதஞ்சைவாணன்வெற்பாவய்மாவழங்கும்
வேரற்கடியகவலையினூடுவெயிலவற்குஞ்
சாரறகருமையதாயிருள்கூருமெஞ்சாரலிலே ௱௮௨

அவனிறவியையயில்யின்விடுத்தல்.

மல்லையம்போர்வென்றவாணன்றென்மாறைநின்மாளிகையாந்
தொல்லையம்போருகந்தேடவுங்கூடுந்தொ[illegible]த்தளிரான்
முல்லையம்போதுமுகையுங்கெய்யாதுமுகிழ்முலையாய்
செல்லையம்பொற்பளிங்கிற்றலம்பாதஞ்சிவப்பிக்கவே ௱௮௩

இறைவினையெய்திப்பாங்கிகையுறைகாட்டல்

முகையாயலராய்முலைக்குநின்வாய்க்குமுறைமுறையே
பகையாமுளரியுஞ்சேதாம்பலுமிவைபங்கழுநீர்
வகையார்தொடைபுனைவாணன்றென்மாறையின்மௌவலன்ன
நகைபாயவையிவைநின்குழற்காமுல்லைநாண்மலரோ ௱௮௪

இற்கொண்டேகல்.

ஒல்காவிருண்மணங்கொலகரும்போ[illegible]தினுணர்ந்துநம்மை
நலகாவியல்பனைநாடினுநாடுநடந்தருணீ
மலகாவிசூழ்தஞ்சைவாணன்றென்மாறையின்வள்ளையின்மேற்
செல்காவியன்னவிழித்திருவேநின்றிருமனைக்கே ௱௮௫

பிற்சென்றிறைவனைவரவுவிலக்கல.

வெம்போர்முருகென்னவேலவலனேந்திவெறிதிங்ஙனே
வம்போர்நகரொலிவாரல்வெற்பாமருவாவரசர்
தம்போர்கடந்ததடம்புயவாணன்றமிழ்த்தஞ்சைநாட்
டம்போருகமல்லவோதிருக்கோயிலணங்கினுக்கே ௱௮௬

பெருமகன்மயங்கல

வஞ்சங்கலந்தகலிவென்றவாணன்றென்மாறைவெற்பிற்
றஞ்சங்கவிந்தசொற்றைநலும்யா[illegible]கனித்தனியே
நெஞ்சங்கலந்தநிலைமையெலலா[illegible]டுநீ[illegible]முதிர்
னஞ்சங்கலந்தனையேநனைவார்குழனன்னுதலே ௱௮௭

தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தல.

முன்னாரரவுந்தெரியாவிருணெறிமுன்னிநையு
மின்னார்புனையிடைமின்னனையாளுய்யவேலின்வெம்போர்
மன்னூர்களிறுதிறைகொண்டவாணன்றென்மாறையன்ன
நின்னூரகம்புகுந்தாற்குறிகாட்டுநெடுந்தகையே ௱௮௮

திருமகட்புணர்ந்தவன் சேறல.

இருங்குன்றனமதிலெய்பதிக்கேகலெளிது[illegible]சம்மை
தருங்குங்குமமுலைத்தையநல்லாய்தஞ்சைவாணன்வெற்பிற்
கருங்குஞ்சரவினம்வெண்சிங்கவேறஞ்சுங்கங்குலினெம்
மருங்குஞ்சுடர்விளக்காமடவார்குழைமாணிக்கமே ௱௮௯

இரவுக்குறி முற்றிற்று.

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிகுளையிறைவரவுணர்த்தல

கயல்வென்றவுண்கண்ணிகாரணமேதுகொலகைதையங்கா
னயனின்றபுன்னையினன்னமெலாமடலாழியங்கைச்
சயமங்கைதன்பெருமான்றஞ்சைவாணன்றரியலர்போற்
றுயரம்பெருகியிராவொருபோதுந்துயினறிலவே ௱௯௰

தான்குறிமருண்டமைதலைவியவட்குணர்த்தல.

பேசத்தகுவதொன்றன்றுகண்டாய்பிறி[illegible]ர்குறியை
நேசத்தவர்குறியென்றுசென்றியான்குறிநின்றுவந்தேன்
வாசத்தமிழ்புனைதோளுடையான்றஞ்சைவாணனென்னார்
தேசத்தவருமெய்தாவெய்யநோயெய்தி[illegible]சேயிழையே ௱௯௧

பாங்கிதலைவனறிங் கெடுத்தியம்பல.

வடியோவெனுங்கண்மடந்தைநலலாய்தஞ்சைவாணனைவந்
தடியோமெனச்சென்றடையலர்போலயர்கிறநின்கைத்
தொடியோடமெனபணைத்தோளிணைவாடுந்தொழிலபுரிந்த
கொடியோர்துணிந்துசெய்தார்குறியாதகுறிஎமக்கே ௱௯௨

புலந்தவன்போதல்.

தேனுற்றவாகையந்தார்த்தஞ்சைவாணனைச்சேரலர்போன்
மானுற்றபார்வைமயில்பொருட்டாகவழிதெரியாக்
கானுற்றகானற்கனையிருள்வாய்வரக்கற்பித்தநீ
யானுற்றநோய்களெல்லாம்படுவாயினியென்னெஞ்சமே, ௧௯௫

புலர்ந்தபின்வறுங்களந்தலைவிகண்டிரங்கல்.

தாதகைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றடந்துறைவாய்
நீதகைகொண்டென்முன்னின்றனையேசெர்நிற்கனிவாய்

மேதகுமுள்ளெயிற்றெண்முகைக்கொங்கைவெண்டோட்டுமென்பூங்
கேதகையென்னுநல்வாயகொண்சர்மாலைகிடைத்ததென்றே. ௪௯௪

தலைவிதன்றுணை[illegible]ணாத்தல்.

வாலிகரியம்பங்கிருள்யாமத்துள்வந்திளவெய்
நாலுஞ்சிலம்பர்நவமணியாழிநறவுண்வண்டு
மூாலுந்தளையவிழ்மொய்ம்மலர்க்காந்தளஞ்செம்மலர்க்கை
விரலென்றுகொல்செறித்தார்நெறித்தாள்குழன்மெல்லியலே. ௪௯௫

இதுபிறசெய்யுட்கவி-தலைமகளவலம்பாங்கிதணித்தல.

பொய்யாதவர்தங்குறிபிழையாரவர்பூண்டவனபு
மெய்யாதறேறியமுங்கனமினனேபுயவெறபிரண்டான
மையாழிவயநிலையிட்டவாணனறெனமாணாவெறபி
னுய்யானமெனகழுநீர்நறுமாலைபுடைத்தலலவே ௪௯௬

இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல.

விம்மூர்துயர்க்கடல்வெள்ளத்துள்ளேயெம்மைவீழ்வித்துநீ
ரெம்மூரகத்துவரலொழிந்தீரொதிரோற்றதெவ்வர்
தம்மூணாமுப்புரமாக்கியவாணன்றமிழ்த்தஞ்சைபே
லும்மூர்வரத்துணிந்தேமன்பகூறுமவ்வூரொமக்கே. ௪௯௭

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல.

துறந்தனளாகியம்போருகந்தன்னையித்தொலவணாமேற்
பிறந்தனளாகும்பெருந்திருமாதெனப்பேதையரிற்
சிறந்தனளாதலிற்செந்தமிழ்வாணன்றென்மாறையன்னாண்
மறந்தனளாயினும்யாமொருபோதுமறவலமே. ௪௯௮

அவள்குறிமருண்டமையவளவற்கியம்பல.

தனையாவரும்புகழத்தரும்வாணன்றமிழ்த்தஞ்சைமா
னனையாளவள்குறியாமிதென்றெறினைந்தலலதொன்று
நினையாவருங்கங்குனின்குறியாவந்துநின்றதும்
வினையாலவிளைந்ததென்றேவெறிதேயன்பமீண்டனளே. ௪௯௯

அவன்மொழிக்கொடுமைசென்றவளவட்கியம்பல.

பலவியம்போலுருமேறெங்குமார்ப்பதும்பார்ப்பதின்றி
வலவியம்போதகம்போர்பயில்கானவந்துவாணன்றஞ்சை
யலவியம்போருகையன்னநின்கேளருளாசைவினின்
றெலவியமபோதுசென்றேனென்றுகேள்வரியம்பினரே. ௫௱

என்பிழைப்பனறென்றிறைவிநேர்தல

வியலூமெயிற்புலிசொர்பிணூழ்மலர்வீழ்தொறெண்ணி
மயலூர்மனத்தொடுவைகினன்யானறஞ்சைவாணனவெற்பர்
புயலூரிருட்கங்குலவர்தவமேயினறுபோயினரொன
றயலூர்நகைக்குமெளனேயெனனபாவங்கொலாக்கினவே ௫௱௧

தாய்துஞ்சாமை.

ஆழியகன்புவியுள்ளனயாவுமடங்கிநள்ளென்
றாழிமுடிந்தனவோங்கிருள்யாமத்துமோவைபினுந்
தாழினும்போகலர்தஞ்சைவாணனறரியலர்போற்
றேழிநப்மனைகண்ணேதுயிலசோட்றுந்தனவே ௫௱௨

நாய்துஞ்சாமை.

தண்ணென்புனலவையைசூழ்தஞ்சைவாணன்றரியலர்போற
பெண்ணெனபாவியும்பேருடைத்தனறிப்பெரும்பதிநா
கண்ணென்பவர்வரக்கங்குலின்ஞாளிக்கண்ணுறைத்துந
துண்ணெனகடுங்குரல்வாயன்னைதுஞ்சினுந்துஞ்சிலவே ௨௱௩

ஊர்துஞ்சாமை.

ஓங்கண்ணலவெம்பகடுந்திவந்தோரையுடன்றுதும்பைத்
தேங்கண்ணிசூடிச்செருவென்றவாணனறெனமாறைமின்னே
தாங்கண்ணனையர்தமைப்பிரிந்தோநந்தனிகண்டோ
நாங்கண்ணுறங்கினுமோவுறங்கார்கண்ணகரவரோ ௨௱௪

காவலர்கடுகுதல.

புயற்கண்ணிபதலைப்பூமெனபாளைப்புதுமதுநீர்
வயற்கண்ணிறைதஞ்சைவாணனறைன்மாறையிலவஞ்சியனனாள்
கயற்கண்ணிணையஞ்சிநீர்மல்கக்காவலர்கைப்பறையின
செயற்கண்ணிணைபலலவோபடுகின்றன திண்கழிப்பே ௨௱௫

நிலவுவெளிப்படுதல்.

தெண்பற்கதிர்முத்தவெண்ணகையாய்திகிரிக்கிரிசூழ்
மண்பாற்புகழ்வைத்த வாணன்றென்மாறை நம்மன்னர்பொற்றேர்
பண்பாற்பரிக்கும்பரிவருமாறென்பரந்தநிலா
வெண்பாற்கடலில்வையம்பதினலுமிதக்கின்றவே ௨௱௬

கூகைகுழறுதல்.

நம்பேருடைமையிருக்கின்றவாகடன்ஞாலத்துள்ளோர்
தம்பேறெனவந்தசந்திரவாணன்றரியலர்போல்
வம்பேறுகொங்கைமயிலனுமஞ்சமன்றமராங்
கொம்பேறிநள்ளிருள்வாய்க்குழறுகின்றகூகைகளே ௨௱௭

கோழிகுரற்காட்டுதல்.

மன்பதைப்புப்பவருந்தஞ்சைவாணன்றென்மாறைவெற்பர்
கொன்பதிவேல்வலங்கொண்டுவந்தாற்றங்கள்கோடனந்தா
னென்பதுதேறியிடையிருளூணையெழுப்பும்வெம்முட்
பொன்பதிதாள்வளைவாய்ச்செய்யசூட்டுவன்னினமே ௨௱௮

இரவுக்குறியிடையீடு- முற்றிற்று.

வரைதல்வேட்கை—தலைமகளைப்பாங்கிப்புருவரல்வினவல்

விண்டார்பதிகொண்டவேற்படைவாணன்வினாகமழ்பூந்
தண்டாமரைமங்கைதங்கியதஞ்சைநின்றுயர்தம்மோ
டுண்டாகியமுனிவோவன்றியாயத்தொடிற்றதுண்டோ
வண்டார்குழலிசொல்லாய்செல்வமேதுன்மனத்திடையே ௨௱௯

அருமறைசெவிலியறிந்தமைகூறல்

மாணிக்கமென்கொம்பனென்சொல்லுமேகன்றஞ்சைவாணன்வெற்பர்
பேணிப்புணர்ந்துபிரிந்தபின்றேன்றலும்பேதைமுகம்
பாணித்தலின்மதிகண்டுநாணியபங்கயம்போ
லாணிக்கவிழ்ந்ததலரந்தாளன்னைநங்களவே ௨௱௰

தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

ஓவலில்வாயன்னை ஞாளியிவ்வூர்க ணுறங்கினுமூர்க்
காவலர்காய்வர்நிலாமதிகாலுங்கடுங்குடிஞைச்
சேவலும்வாரணமுந்தஞ்சைவாணனைச்சென்றிறைஞ்சா
மேவலர்போல்வெய்யவாயடையாவென்மெலிவறிந்தே ௨௱௰௧

தலைமகனூர்க்குச்செலவொருப்படுதல்.

நம்பானலனுண்டநம்பாதகர்தங்கர்வினவித்
தம்பாலுடன்சென்றுசார்குவமோதரியாரைவென்று
வம்பார்கழல்புனைவாணன்றென்மாறைவளரும்வஞ்சிக்
கொம்பாகியமருங்குற்கரும்பாமொழிக்கோமளமே ௨௱௰௨

பாங்கியிறைவனைப்பழித்தல்

வறியார்புகழ்தஞ்சைவாணன்றென்மாறைமடந்தையஞ்ஞ
ளறியாயுயர்முன்னறிந்தவர்தாமகனுலழலின்
பொறியாழியிர்வெம்பணிமாமணியும்புதையிருள்கூர்
நெறியாரருள்பெறநாடுகொளிடைநீந்துதுமே ௨௱௰௩

இறைவியிறையோன்றன்னைநேர்ந்தியற்படமொழிதல்.

பிணராவிரகமும்போகாவிரவும்புணர்முலைமே
லிணரார்பசப்பும்பிறவுமெல்லாமிருள்கூர்ந்தறல்போல்
வணரார்குழற்பிறைவாணுதலாய்தஞ்சைவாணன்வெற்ப
ருணராதிருப்பதுவேறென்றுமல்லநம்மூழ்வினையே ௨௱௰௪

கனவுநலிபுரைத்தல்.

இல்லாவருந்துயிலுண்டாயவரும்வந்தெய்திற்கங்குற்
பொல்லாதசேவற்கடுங்குரலார்த்துப்புவிபுரக்கு
மல்லார்புயன்றமிழ்வாணன்றென்மாறைமருவலர்பொ
லல்லாமைநெஞ்சந்தடுமாறநல்லிடையாக்கியதே ௨௱௰௫

கவினழிபுரைத்தல்.

வாளினுநீள்விழிவாணுதலாய்தஞ்சைவாணன்றெவ்வி
னாளினுநாளுநலந்தொலைவேனகையாரயில்வேல்
வேளினுமோர்நல்வெற்பனுநீயுமென்மேனியினுந்
தோளினுநோயறியீரறியாததென்றொல்வினையே ௨௱௰௬

தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்

வரைப்பான்மதுரத்தமிழ்தெரிவாணன்றென்மாறைவையை
நுரைப்பான்முகந்தன்னநுண்டுகிலாயிந்தநோயவர்க்கின்
றுரைப்பாருளரோவுயிரொய்தலாநமக்கூர்திரைசூழ்
தரைப்பால்வளரும்புகழெய்தலாமவர்தங்களுக்கே ௨௱௰௭

அன்புறுபாங்கிசொல்லெனச்சொல்லல்.

ஒல்லெனவேயெனதுறுதுயர்தாமுமுணரும்வண்ணஞ்
சொல்லெனநீயிதுசொல்லியென்பேறுன்றுயரமெல்லாம்
வல்லெனவேகொண்டகொங்கையர்வேட்டஞ்சைவாணன்வெற்பி
லல்லெனவார்குழலாயறியூரல்லரன்பருமே ௨௱௰௮

அலர்பார்த்துற்றவச்சக்கிளவி.

மலருந்தொடைவஞ்சிவஞ்சகமாதருமாரனும்வா
யலருந்தடங்கையலருந்தொடாநிற்பவஞ்சிநெஞ்சம்
பலரும்புகழ்தஞ்சைவாணர்பிரானைப்பணியலர்போற்
புலரும்பெயருங்கண்ணீர்புலராதுபுலரினுமே ௨௱௰௯

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி

ஆயுங்கரியும்பொருநெறிக்கோர்துணையாயவர்மேற்
சொரியுந்திவலைதுடைக்கவென்றேகுழைதோய்ந்துஞ்சும்
வரியும்பயில்கண்ணிவாணன்றென்மாறைநம்மன்னர்வந்து
பிரியும்பொழுதெல்லிவாய்வினையேன்மனம்பின்செல்வதே ௨௱௨௰

காமமிக்கழிபடர்கிளவி

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா
ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவற்கிவளோ
தீதுற்றதென்னுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே ௨௨௧

இதுபிறசெய்யுட்கவி

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்
கண்டலைமே[illegible]கரியாக்கன்னிப்புன்னைக்கலந்தகள்வர்
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு
மண்டிலமேபணியாயதமியேற்கொருவாசகமே ௨௨௨

இதுபிறசெய்யுட்கவி—நெறிவிலக்குவித்தல்

நன்றாளினுமெனக்கன்புடையாய்சென்றிரந்துகொண்டு
சான்றாண்மையன்பர்தமக்குரைநீதஞ்சைக்காவலனைத்
தேன்றாழ்வரைத்தமிழ்சேர்த்தியவாணனைச்சேரலர்க்குந்
தோன்றாவிருங்கங்குனீவருமாறுதோன்றலென்றே ௨௨௩

குறிவிலக்குவித்தல்.

வெற்றியவாளியவாணன்பிரான்றஞ்சைவெற்பகத்திற்
பெற்றியசோலைப்பிறங்கிருள்வாரன்மின்பேதையினு
முற்றியவேனற்படுகிள்ளையோட்டுமுறைமையளென்
றெற்றியகாதலினாலிசைத்தாளன்னையென்றுரையை ௨௨௪

வெறிவிலக்குவித்தல்.

மின்னுதிடித்தனவன்னைகொண்டாள்வெறிவிந்தைமங்கை
மன்னுண்மைமன்னியவாணன்றென்மாறைவரையில்வண்டியா
ழென்னுவசுணமிறைகொள்ளுநாடனெனக்கருளான்
முன்னாளருளியநோய்தணிப்பானின்றுமொய்குழலே ௨௨௫

பிறவிலக்குவித்தல்

பொருபான்மதியினைப்போன்மருப்பியானையிற்பொன்னுடிபங்
கருபான்மொழிவஞ்சிசாரவந்தார்தஞ்சைவாணன்வெற்பின்
னொருபானுதமலரொன்னவெந்தீயுலையுற்றசெவ்வே
லிருபான்மருங்கினுங்கொண்டெறிந்தாலொத்ததென்செவிக்கே ௨௨௬

குரவரைவல்லாமெதிர் கோள்குறுவித்தல்.

தற்பழியாமலுஞ்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சைநங்
கற்பழியாமலுக்காரணமாகக்கயல்விழிநின்
சொற்பழியார்நமர்சொல்லுவல்லேலசென்றுசொல்லலையே
விற்பாழியாம்விழியாநீமீதாருயிர்க்கேதமுமே உஉஎ

வரைதல்வேட்கை முற்றிற்று.

வரைவுகடாதல்.

வினவியசெவிலிக்கு மறைத்தமைவிளம்பல்.

தளராவிளமுலைதாங்குகில்லாதுதளரிடைகண்
வளராதவெதன்குல்வாராயெனத்தஞ்சைவாணன்வெற்பா
விளரார்திருநுதலன்னைக்கோர்மாற்றம்விளம்பியுய்ந்தே
னுளராமவர்வலையுட்பட்டுவாழ்வதுணர்ந்தருளே உஉஅ

அலரறிவுறுத்தல்.

மணிவரைமாளிகைமாறைவரோதயன்வாணன்வெற்பா
பணிமொழியாளென்னுங்கொள்கொம்புமுடிகபடர்ந்தயலா
ரணிமனைதோறுங்கொழுந்துவிட்டம்பலரும்பிமண்மேற்
றணிவிலதாகப்போதலர்பூத்ததுன்றனணிளியே உஉகூ

தாயறிவுணர்த்தல்.

திரையிற்பவளம்வடவாமுகத்தெழுந்திகமெகாழுந்திற்
றிரையிற்படருங்கடற்றுறைநாடகயற்செடிபொன்
வரையிற்றிகழ்வித்தவாணன்றென்மாறைமலர்ந்தமௌவல்
வினையிற்களவையெல்லாமறிந்தாளன்னைமெய்யுறவே உ௩௰

வெறியச்சுறுத்தல்.

மையுற்றநீலக்கண்மாமங்கைகோன்றஞ்சைவாணன்வெற்பி
னெய்யுற்றவேலன்பரீதணியாமையினெஞ்சினுள்ளே
யையுற்றயர்வுற்றெம்மன்னையும்யாயுமெல் லாரணங்கின்
மெய்யுற்றநோய்தணிப்பான்வெறியாடல்விரும்பினரோ உ௩க

பிறர்வரை புணர்த்தல்.

வெடிக்கின்றவிப்பியுணித்திலம்பைத்தலைவெம்பகுவாய்த்
துடிக்கின்றதிங்களிற்றேன்றுர்துறைவசெஞ்சொற்புலவோர்
வடிக்கின்றமுத்தமிழ்வாணன்றென்மாறையெம்மான்மருங்கை
யொடிக்கின்றகொங்கைகண்டாலெவர்நெஞ்சுருகாதவரோ உ௩உ

வரைவெதிர்வுணர்த்தல்.

குருதிகண்டாலன்னகாந்தளஞ்சாரற்குறிவெறிதே
வருதிகண்டாய்தஞ்சைவாணன்வெற்பாவெங்கண்மாநகர்நீ
சுருதிகண்டாய்தஞ்சைவாணன்வெற்பாவெங்கண்மாநகர்நீ
பருதிகண்டான்மலராதொழியாகயப்பங்கயமே உ௩௩

வரையுநாளுணர்தல்.

அலம்பனகண்ணிவள்கொங்கைமென்சுணங்காகிவண்டு
பலகம்பலைசெய்யப்பூத்தனவேங்கைபனிவரைமேற்
றிலகம்பதித்தெனசசேல்வைத்தவாணன்றென்மாறைமன்ன
[illegible]சிலம்பாபதியூர்கொண்டதே உ௩௪

அறிவறிவுறுத்தல்.

வன்னாண்முளரிமுகைவென்றவாணன்றென்மாறைவெற்பிற்
கனநாணணிந்துபொற்கச்சறவிசிக்கதித்தெழுந்த
தனநாணிநுண்ணிடைத்தையனல்லாள்பழிசாற்றுவல்பா
னெனநாணியின்பழிதான்மறைத்தாளன்பவென்னையுமே ௨௩௫

குறிபெயர்த்திடுதல்.

ஊரேரோர்பவரிங்குலாவருங்கூடும்வந்தொண்சிலம்பா
வேறோர்பொதும்பரிற்போய்விளையாடுகவேற்படையான்
மாறோர்பகைவென்றவாணன்றென்மாறையெம்மன்னுதவப்
பேறோர்வடிவுகொண்டாலன்னநீயுமென்பேதையுமே. ௨௩௬

பகல்வருவானையிரவுவருகென்றல்.

முத்தணிநீலமணித்தடத்துள்கொங்குமொய்கொளவே
வைத்தணிசேரவருத்தகுபோற்றஞ்சைவாணன்வையைப்
பைத்தணிவார்திரைமேதாய்கருந்தாட்புன்னைப்பாசிலைவெண்
டொத்தணிபூந்துறைவாவருவாயிருடேங்கிடையே ௨௩௭

இரவுவருவானைப்பகல்வருகென்றல்.

இழைவிளையாடுதுன்முலைசாயற்கிடைந்தமஞ்ஞை
கழைவிளையாடுங்கடிப்புனங்காத்துங்கலையகலா
நுழைவிளையாடுமுயர்சிலம்பாவின்னுமுன்பொருட்டான்
மழைவிளையாடுமதிற்றஞ்சைவாணன்மலயத்திலே ௨௩௮

பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்.

குரவுங்கணிப்பும்விரிமவெற்பாவெய்யகுஞ்சரமேல்
வரவுந்தியதெவ்வைமாற்றியவாணன்றென்மாறைமின்னு
மரவும்பணியுநுடங்கிடையாற்றலளாற்பகலு
மிரவுக்குறிவயினீவரல்வேண்டுமிவள்பொருட்டே ௨௩௯

பகலினுமிரவினுமகலிவணென்றல்.

தாவாதசெல்வந்தருந்தஞ்சைவாணன்றடஞ்சிலம்பா
நீவாரல்சாரனிலவலராம்பகனீடிருளார்
மாவானிலவுநிலமங்கைவார்குழன்மல்லிகைபோ
லோவாதிரவெறிக்குஞ்சோலைநீழலினூடுவந்தே ௨௪௰

உரவோனுடுமூருங்குலனுமரபும்புகழும்வாய்மையுங்கூறல்.

தலத்திற்குமாறைக்குமன்னவன்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்குமாமணியாகுநின்னாட்டிற்குநின்பதிக்கு
குலத்திற்குமாசில்குடிமைக்குஞ்சீர்மைக்குங்கோதின்மெய்ம்மை
நலத்திற்குமாவதன்றால்வரையாதுநடப்பதுவே ௨௪௧

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

புராந்தகர்செஞ்சடைவெண்பிறைபோனுதற்புள்ளிமிழ்பூங்
குராந்தொடைமென்குழற்கொம்பினைவேண்டிக்கொடிமுல்லைநீண்
மராந்தழுவுந்தஞ்சைவாணன்வெற்பாவல்சிதோந்திலஞ்சிக
கராந்திரிகல்லதர்வாரியல்லிநீவரல்கற்பலவே ௨௪௨

ஆற்ருத்தன்மையாற்றக்கூறல்.

கல்லகுர்தெளியுங்களைலெழூச்செறியுங்கண்ணினீர்
மலங்கும்பொலந்தொடிசோரமெய்சோருமறஞ்செய்கோலை
விலங்கும்படிமுசெய்யாகருன்றநாடவிளைந்தளிப்பா
யலங்குங்கடும்பரித்தேர்வாணன்மாறையணங்கினையே ௨௪௩

காவன்மிகவுரைத்தல்.

நஞ்சாரரவங்கிரிதருகானடுநாளிரவி
லஞ்சாதுசெங்கையயில்விளக்காவணங்கின்பொருட்டான்
மஞ்சார்மதிற்றஞ்சைவாணன்வெற்பாவரல்வன்சொலன்னே
துஞ்சாள்கடுந்துடிக்கைநகர்காவலர்துஞ்சினுமே. ௨௪௪

காமமிகவுரைத்தல்.

தென்னனைவண்டமிழ்வாணன்றென்மாறைச்செருந்தியுடன்
புன்னைகமழுங்கமழ்பூந்துறைவாசுரர்போற்றமிர்தம்
பின்னைகமுவந்தபேதைதன்காமப்பெருங்கடற்கு
மின்னைகமன்றியுண்டோபுணையாதுநீந்துதற்கே. ௨௪௫

கனவுநலிபுரைத்தல்.

மாணுநதெவ்வென்றவாணன்றென்மாறைவளநகர்பொற்
பூணுகமெல்லியிற்புல்லினையாகவப்பொய்யைமெய்யாப்
பேணுமகிழ்ந்துபெருந்துயிலேற்றவள்பின்னைநின்னைக்
காணுள்கலங்கினளாற்கலங்காமனக்காவலனே. ௨௪௬

கவினழிபுரைத்தல்.

ஏரேற்றகொங்கையிளங்கொடிமாந்தளிரோய்ந்தவண்ணங்
காரேற்றங்கங்குலிற்பீரலர்போன்றதுகாவியுண்கண்
வாரேற்றபைங்கழல்வாணன்றென்மாறையில்வாவியின்கண்
ணீரேற்றசெங்கழுநீர்மலர்போன்றதுநின்பொருட்டே. ௨௪௭

வரைவுகடாதல் முற்றிற்று.

ஒருவழித்தணத்தல்-தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

திரைகேதகைமணங்கூடுமொர்பாடியிற்சென்றுவந்தியான்
வரைகேன்வருந்துணைவல்லியைநீதஞ்சைவாணன்செவ்வேற்
புரைகேழ்மதர்விழிக்கோங்கரும்பேழைப்பூசல்வண்டு
விரைகேசவஞ்சியஞ்சேலென்றுதேற்றுதனின்கடனே ௨௪௮

பாங்கிவிலக்கல்.

பறந்தாங்கிவர்பரித்தேர்கடவேலுன்பதியடைந்தான்
மறந்தாங்கமையவும்வல்லையன்பாதஞ்சைவாணனென்னார்
நிறந்தாங்கிவர்கணைபோலுண்கண்மாமுகினீர்மைகொண்டு
புறந்தாழ்கருங்குழல்வெண்முத்தவாணகைப்பொன்னினையே ௨௪௯

தலைவனீங்கல்வேண்டல்.

அறையும்பொறையுமணந்தவெங்கானத்தணங்கையில்வைத்
திறையும்பிரிவதற்கெண்ணுகிலேனெண்ணரார்வரைமேன்
மறையும்படிவென்றசர்திரவாணன்றென்மாறையில்வண்
டுறைபுங்குழலிசென்றேவரல்வேண்டுமெய்மூரகத்தே ௨௫௦

பாங்கிவிடுத்தல்.

இல்லத்துறையுமிவள்பொருட்டானுமக்கியானுமொன்று
சொல்லத்தவிர்கிலன்சூழ்கழலீர்சுடர்சோய்புரிசை
வல்லத்தமர்வென்றவாணன்றென்மாறைபிலவந்துவந்து
செல்லத்திருவுளம்வைத்தகல்வீர்நுந்திருநகர்க்கே ௨௫௧

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்.

நிலவேய்தரளநிரைத்தன்னவாணகைநீலநிறக்
குலவேய்சூர்பொற்றொடிநெடுந்தோளிகுறுகிவாச்
செலவேகருதினர்செந்தமிழ்வாணன்செழுங்கமலத்
தலவேதியன்பெறுநாள்பெற்றுவாழ்பவன்றஞ்சையிலே ௨௫௨

தலைவிநெஞ்சொடுபுலத்தல்.

குளித்தாரிளங்கொங்கைபாவியிலாவிகுளிர்ப்பநம்மை
யளித்தாரளித்தகலத்தணைத்தாரன்றணங்கின்முன்னே
தெளித்தார்செழுந்தஞ்சைவாணனென்னாரிநெஞ்சிந்தையை
வொளித்தாரவரிங்ஙனேநன்றுநன்றிவ்வுலகியலே ௨௫௩

சென்றோனீடவிற்காமமிக்கழிபடர்கிளவி.

மயிலாடுதண்டலைமாறைவரோதயன்வாணனென்னார்க்
கெயிலாகியகடற்கானலஞ்சேர்ப்பற்கிடையிருள்யான்
றுயிலாநிலையொன்றுஞ்சொல்லாய்துணையுடன்சூழ்நிரைதேன்
பயிலாமலரணைமேற்றுயிலாநிற்றிபாலன்னமே ௨௫௪

தலைவியைப்பாங்கியாற்றுவித்தல்.

ஆடுகம்வாநம்மான்றவரூரகலாப்புதுநீர்
பாடுகம்வாபொற்பசலைதந்தார்திறம்பாங்கினெல்லாந்
தேடுகம்வாதஞ்சைவாணனன்னாட்டன்பர்தேர்வழிநாஞ்
சூடுகம்வாகவலாதவர்கானற்றுறைமலரே ௨௫௫

தலைவன்வந்தமைபாங்கியுணர்த்தல்.

பண்ணுங்குயிலும்பழித்தசொற்பாவைபரியலெல்லா
மண்ணும்புகழ்தஞ்சைவாணனென்னொனமைக்குவளைக்
கண்ணுந்தளையிருட்கங்குலுமாரன்கணைகள்பட்ட
புண்ணும்புலரவந்தார்தமதூர்வயிற்போனவரே ௨௫௬

பாங்கிதலைவனோடுநொந்துவினவுதல்.

ஒருதலைக்கெய்தியகல்லதர்க்குச்செல்லவோருயிர்த்தா
யிருதலைப்புள்ளினியைந்தநுங்கேண்மையையெண்ணியெம்மூர்
வருதலைக்கொண்கநினைந்திலைவாணன்றென்மாறைவண்டு
பொருதலைக்கொண்கநினைந்திலைவாணன்றென்மாறைவண்டு ௨௫௭

தலைவன்பாங்கியொடுநொந்து வினுதல்.

ஐவாயுரவுற்றதன்னவினுவிடராற்றியென்போ
லெவ்வாயிருந்திர்நீரொல்வளையீரொதிர்ந்தாரைவென்று
மைவாரணங்கொண்டவாணன்றென்மாறைமாநவலர்போ
லெவ்வாவலைாயுங்கேட்டிருவீருமொருதனியே ௨௫௮

தலைவன்பாங்கியொடுநொந்துவினவுதல்.

இவளாருயிர்புரந்திபானிருந்தேன்செக்கரிந்துவன்னப்
பவளாடவியிற்பயினித்திலம்பங்கயங்குவியத்
தவளாதவஞ்சொரிதண்டுறைவாதஞ்சைவாணன்றெவ்விற்
றுவளாமலாற்றுவியென்றன்றுநீசொன்னசொன்னினைந்தே உருசு

ஒருவழித்தணத்தன்-முற்றிற்று.

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல்.

என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்.

கழைபோல்வளர்நெற்கவின்பெறவாரிகவர்ந்துவரு
மழைபோல்வருகுவன்வன்சுரம்போய்த்தஞ்சைவாணன்வெற்பி
லிழைபோலிடையாண்முலைவிலைக்காவனயாவையுங்கொண்
டுழைபோலரிநெடுங்கண்மயிலேசென்றுணர்த்திதுவே உசூய

நின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றல்.

வசையும்புகழுநின்மேலனவாந்தஞ்சைவாணன்வெற்பா
மிசையுங்கருமபினில்வேம்புவைத்தாலன்னவேட்கையெல்லாத்
திசையும்பரவுந்திருவனையாடன்றிருவுளத்து
இசையும்படிவல்லையேற்சொல்லிநீபின்னென்முன்றருளே உசூக

நீடேனென்றவனீங்கல்.

காலைப்பொழுதுகடும்பரித்தேர்பண்ணிக்கானகம்போய்
மாலைப்பொழுதுவருகுவல்யான்றஞ்சைவாணனன்னாட்
டாலைப்பழனமணிந்தவெம்மூர்நும்மகங்குளிரச்
சோலைப்பயில்குயில்போன்மொழியாயென்றுணிவிதுவே உசூஉ

பாங்கிதலைவிக்கவன்செலவுணர்த்தல்

வில்லேய்குறும்புமிறும்புமெவ்வாயும் விராயவெவ்வாய்க்
கல்லேய்கவலைக்கடங்கடந்தார்நமர்காய்ந்தெதிர்ந்தார்
செல்லேய்முரசச்செருவென்றவாணன்றென்மாறையினின்
வல்லேய்முலைவிலைதான்றந்துநாளைமணம்பெறவே (ஙசூங)

தலைவியிரங்கல்.

இப்பெருவகையினிப்பிரியேனென்றுமென்முன்சொன்ன
வப்பெருநாபழுதாமென்னவேவரவஞ்சுமந்த
மைப்பேரலைகடல்வையகந்தாங்கியவாணன்றஞ்சைச்
செப்பேரிளங்கொங்கைமங்கைசெப்பாதன்பர்சென்றதுவே (உசூச)

பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

ஆரணத்தானருள்பாரளித்தானடங்காதவரை
வாரணத்தால்வென்றவாணன்றென்மாறைவயங்கொளிசேர்
பூரணத்தார்மதிபோன்முகத்தாயென்புலம்புதின்
காரணத்தாலல்லவோபிரிந்தாரின்றுகாதலரே (உசூரு)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

மண்டுந்திரைவையைசூழ்தஞ்சைவாணன்றுவன்புவியுஞ்
செண்டுங்கொடுத்தகல்செம்பியர்போலன்பர்சென்றுழிமுன்
னின்றிங்கழையுட்பயிலும்வெங்கானபல்கேட்டபின்னுறுப்
கண்டுங்கலங்கல்செல்லாநின்றதூசொற்கழறனன்றே (உசூசு)

வருகுவர்மீண்டென்பாங்கிவலித்தல்.

தேர்த்தானைவாணன்றென்மாறைமின்னேயஞ்சல்செம்புருக்கி
வார்த்தாலனைவழிநெடும்பாலைமடப்பெடைநோய்
பார்த்தாதவர்தணிபாதவமின்மையிற்பைஞ்சிறகாற்
போர்த்தாலுமஞ்சைகண்டும்போவரோநம்புரவலரோ (௨௬௭)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

மிகவும்பரந்தபரியகண்ணீர்செங்கைவெள்வளைபோ
லுகவுந்துறந்தவருன்னலராலுறைகார்பொழிய
மகவுந்துணையுங்கலைதழுவுந்தஞ்சைவாணன்வெற்பிற்
ணகவும்பெடைமயிலுந்தமியேனெங்ஙனாற்றுவலே (௨௬௮)

இகுளைவம்பென்றல்.

தனஞ்சேர்ந்தவஞ்சிநின்சாயல்கண்டஞ்சித் தனித்தனிபோய்
வனஞ்சேர்ந்தயர்ந்தமயில்களெல்லாந்தஞ்சைவாணன்வெற்பிற்
கனஞ்சேர்ந்தலர்துளிகாலுமுன்னேவம்புகாலுமென்று
வினஞ்சேர்ந்தகவினாந்தனிவாடியிருத்தல்கண்டே (௨௬௯)

இறைமகன்மறுத்தல்.

வாவித்தகையன்னமேதஞ்சைவாணன்வரையகத்தென்
பாவித்தனிநெஞ்சுபார்த்தஞ்சுமேகண்பயின்றகண்ணோர்
தாவித்தனைமயில்கோபங்கொள்ளாவரத்தோன்றியைச்சேர்ந்
தாவித்தகந்தளரும்மணிகாலுமராவென்னவே (௨௭௰)

அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதெனத்துணைவிசாற்றல்.

இன்னேவருவர்நின்காதலரேதிலரேங்கவினிக்
கொன்னேயிரங்கிவருந்தல்கண்டாகொற்றநேமிவிந்தை
மன்னேயெனவந்தவாணன்றென்மாறைவரவுணர்ந்த
முன்னேநடந்தனகாண்கடுங்காலமுகிலினமே (௨௭௧)

தலைமகளாற்றல்.

இன்புற்றகாலத்திருவர்க்குமொன்றுயிரொன்றுசொன்ன
ரன்புற்றகாதலராதலினாலகன்றாரெனாந்
துன்புற்றகாலத்தவருமுறாரல்லர்தோழிசொல்லும்
வன்புற்றகாரளிக்குந்தஞ்சைவாணன்றென்மாறையிலே (௨௭௨)

அவனவட்புலம்பல்.

விழிகுழியும்படிதேர்வழிபார்த்தணைவீழ்ந்துவண்டு
கொழுதிமிருங்குழல்சோர்க்கிடந்துகுடங்கையின்மே
லொழுகியவஞ்சனவெள்ளத்துணங்குமணங்கைமுன்சென்
றெழுகெனுநெஞ்சமென்னேயவரோயெனிலென்சொல்லுமே (௨௭௩)

இதுபிறசெய்புட்கது-பாகனொடுசொல்லல்.)

வன்மாமுடுகுவலவதிண்டேர்நிவாணன்றஞ்சைக்
கென்மாலுறுநெஞ்சினமுன்செலநாகிளவேறுபுல்லிப்
பொன்மாமணியும்பிரிந்திருந்தாரும்புலப்புமன்றிற்
செம்மாலைபந்திகண்டாற்றரியாளென்றிருந்திழையே (௨௭௪)

மேகத்தொடுசொல்லல்.

வேண்டும்பொருளைத்தரும்பொருட்போய்முற்றிமீண்டவென்றேர்
தூண்டும்பரிமுன்றுனைமுகில்காள்சென்றுசொல்லுமிந்து
தீண்டுங்கொடிமதில்சூழ்தஞ்சைவாணனைச்சேரலர்போ
லீண்டும்பசலைமெய்போர்த்திருப்பார்தமக்கென்வரவே (௨௭௫)

பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

பொருகின்றசெங்கயல்போல்விழியாய்ப்பண்டுபோய்நின்கைக்
குருகின்றணிந்திறைகொள்வதுகாண்கநங்கொண்கர்பொற்றேர்
தருகின்றசங்கநகருவன்னவாணன்தமிழ்த்தஞ்சைவாய்
வருகின்றதென்றுமுன்னேயோகைகூறும்வலம்புரியே (௨௭௬)

வலம்புரிகிழத்திவாழ்த்தல்.

மால்வண்டெனமன்னிவாணன்றென்மாறைமன்னன்புகழே
போல்வண்டமிழ்மன்னர்போற்றவிளங்குகபொன்கொழிக்குங்
காலவண்டல்வையைக்கரைமலருமல்லிகைக்கான்முகையின்
மேல்வண்டிருந்ததுபோற்கருமாமுகவெண்சங்கமே (௨௭௭)

தலைமன்வந்துழிப்பாங்கிநினைத்தமைவினவல்

நினையீர்பொருட்குப்பிரிந்தயனாட்டுழிநின்றுழிவே
ளனையீர்நினைந்துமறிதிர்கொல்லோவஞ்சொலாலரிவோர்
வனையீரிதழ்க்கண்ணிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போ
லனையீரிதழ்க்கண்வைகாவெவ்வநோயுற்றநவ்வியையே. (௨௭௮)

தலைவனினைத்தமைசெப்பல்

கானெடுங்குன்றங்கடந்துசென்றேனொருகாலுமைதோய்
மானெடுங்கண்ணிமறந்தறியேன்வண்கைவாணன்றஞ்சை
நீணெடும்பெண்ணைக்குரும்பையுஞ்சூதுநெருங்குகொங்கைத்
தேனெடுங்கண்ணிமென்பூங்குழன்மாதர்திருமுகமே (௨௭௯)

பாங்கிதலைவியாற்றுவித்திருந்தமைகூறல்.

உயராமலத்தருங்கனிநீர்நசைக்குஞ்சுரம்போய்
வியராமவில்லினடுக்கன்றுளைமென்பூஞ்சிலம்பா
வயராமலஞ்சலென்றாற்றுவித்தெனிவ்வவனியெல்லா
மயராமல்வந்தபிரான்றஞ்சைவாணனறென்மாயிலே (௨௮௰)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல் - முற்றிற்று.

(வரைவுமலிவு.)

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கிகாதலிக்குணர்த்தல்.

தொலைவிலையாகியபலபொருள்காதலர்தூதமர்நின்
முலைவிலையாகமுகந்தளித்தார்முனைவேந்தர்தம்மைத்
தலைவிலையாகத்திறைகொண்டவாணன்றமிழ்த்தஞ்சைநீ
யுலைவிலையாகுகபொன்வண்ணமாறுகவொண்ணுதலே (௨௮௧)

காதலிநற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

கயமாமலரொனுங்கண்ணியைவண்டெனுங்கானைபல்புள்
ளியமாமணம்புணர்ந்துறைநாடரெதிர்ந்தவர்மேல்
வயமாநடத்தியவாணன்றென்மாறைவருகுவரோ
நயமாமணவணிகண்டியாமின்புறுநம்மினுமே (௨௮௨)

இறைவிதலைவனிகந் தமைமியம்பல்:

வரியோலவண்டலை தண்டலைசூழ்தஞ்சைவாணன்வண்மைக்
குரியோனுயர்வைவைப்பொண்டுறைவாயுரவோர்தெளித்துங்
கரியோர்பிறரில்லையென்றகன்றேரிணிக்காரிகையாய்
பெரியோர்மொழிபிறழார்ஒன்றுதேறுதல்பேணுதமையே. உ௬௧

பாங்கியிபற்பழித்தல்.

மழவேதுறந்துமறந்தவர்போற்றஞ்சைவாணன்வென்றி
முழவேயமுந்நீர்முழுங்கிருங்கானன்முழுதுலகுந்
தொழவேதகுந்தெய்வநோக்கிச்செல்லேனென்றுசொல்லியுநீ
யழவேதுறந்தனராநல்லர்நல்லரவ்வாடவரே. உ௬௨

தலைமகளியற்படமொழிதல்

மாகப்பிடன்மண்ணில்வந்தனவாணன்றென்மாறைமூந்நீர்
நாகப்புகர்ச்செய்யபுள்ளிபைங்கான்ஞெண்டுநாகிளந்தண்
பூகக்குளிர்நிழற்பேடையொடாடும்புலம்பரின்று
ராகக்கருதினல்லாயினியாரினியாருளரோ. உ௬௩

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

மாதங்கனல்குங்கைவாணன்றென்மாறைவையைத்துறைவ
ரோதப்பயந்திலரொங்கட்குநீயெம்மிகந்ததனாற்
போதம்படாதிகொடுந்தெய்வமேயென்றுகூர்பதிதூய்ப்
பாதம்பரவநல்லாயிருவேமும்படர்குவமே உ௬௪

இல்வயிற்செறித் தமையியம்பல்:

தன்போலுலகம்புரக்கின்றவாணன்றமிழ்த்தஞ்சையார்
மன்போலெவர்க்கும்வழங்கி யுண்ணாதவர்வைத்திழக்கும்
பொன்போலிறுகப்பெறிந்துகொண்டாளன்னைபூவையென்மேல்
வன்போதியமடவாரலர்தூற்றியவாறுகண்டே உ௬௫

செவிலிகனையிருள்வன் வரக்கண்டமைகூறல்

வெங்கார்முகவெம்புநவமின்னேயன்னைமேலொருநா
ளெங்காதலரிருளெய்தல்கண்டாளிந்தவேழுலகு
மங்காமல்வந்தருள்வாணன்றென்மாறைவண்டானமஞ்சச்
சங்காழிகொண்டெறியுங்கண்டலேவெலியந்தண்டுறைக்கே உ௬௬

எறிவனைவேற்றுமைக்கேதுவினவல்:

பொன்னுற்றகொங்கையுமுத்துற்றகண்ணுமிப்போதுகண்டே
புன்னுற்றசொல்லுமின்பாலுங்கொள்ளாள்பதினுலுலகு
மன்னுற்றவண்புகழ்வாணன்றென்மாறையென்மானனையாட்
கென்னுற்றதென்றறியேன்புனங்காவலிருந்தபின்னே உ௬௭

பாங்கிவெறிவிலக்கல்.

அறியாமையின்றென்றுகேட்கலுற்றேநும்மைபாவதோன்றுங்
குறியாமறியுயிர்கொள்ளவென்றோகுருதிப்பலிகூர்
வெறியாலிவளுயிர்மீட்கவென்றோவென்றிவேல்வலத்தீர்
சிறியார்மனையில்வந்திதஞ்சைவாணன்சிலம்பினின்றே உ௬௮

பாங்கிதமர்வரைவெதிர்த்தமைதலைவிக்குணர்த்தல்.

பணிப்பாலிகைமுத்தம்வைத்தாங்கடம்பலர்வார்திரைதூ
யணிப்பாய்துவலையரும்புந்துறைவர்க்கணியெதிர்ந்தார்
பணிப்பாசிழையல்குல்வெண்ணகையாய்நமர்பாரநின்னேய்
தணிப்பான்முரசறைந்தார்தஞ்சைவாணன்றமிழ்நிலத்தே (௨௮௩)

தலைமகளுவகையாற்றுளத்தொடுகிளத்தல்.

சோகாகுலமெய்தல்காண்டுநெஞ்சேநந்துறைவரொனு
நீகானுடன்பள்ளிநீள்வங்கமேறிநிலம்புரக்கு
மாகாவிரியன்னவாணன்றென்மாறைமன்னன்பகையு
மேகாவிருட்கங்குலாங்கடற்காலையெனுங்கரையே (௨௮௪)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

மாரியஞ்சுங்கொடைவாணன்றென்மாறையில்வாழிவண்டார்
வேரியந்தொங்கல்விரைகமழ்மார்பவிடாதவம்பற்
சேரியம்பொய்கைத்துறைபலர்வாடலர்வாடநெஞ்செவ்விமணந்
தாரியஞ்சங்கதிரக்காட்டுநீயன்றுகூட்டலரோ (௨௮௫)

தலைவிமணம்பொருட்டாக வணங்கைப்பராநிலைகாட்டல்

உரவிப்பெருங்கலித்துன்பங்கள்போய்முதலூழியின்பம்
வரவிப்படிதன்னைவாழ்வித்தவாணன்றென்மாறையன்னாள்
புரவிப்புனைநெடுந்தேரண்ணலேநினைபொருட்டணங்கைப்
பரவிப்பரவிநின்றேவரம்வேண்டுதல்பார்த்தருளே (௨௮௬)

பராநிலைகண்டதலைமகன்பகிழ்தல;

இவ்வித்தகமிவட்கெய்தியதெவ்வண்ணமெவ்வுலகும்
வவ்வித்திகழ்புகழ்வாணன்றென்மாறைமணம்பொருட்டா
னவ்வித்தொகையினநானுமென்னேக்கிநறைபுனையா
செவ்வித்தகைமலர்தூய்த்தெய்வம்வாழ்த்துந்திருத்தகவே (௨௮௭)

வரைவுமலிவு-முற்றிற்று.

அறத்தொடுநிற்றல்—கையறுதோழிகண்ணீர் துடைத்தல்.

அயிரார்திரைவந்துன்வண்டதம்பாவையழித்தனவோ
செயிராதவன்னைசெயிர்த்தனளோசெறிநாளைதின்போர்
வயிரார்நரலும்வயற்றஞ்சைவாணன்றென்மாறையிலன்
னுயிராகியதையனீகலுழ்மாறென்னுளங்குழைந்தே (௨௮௮)

தலைமகள்கலுழ்தற்காரணங்கூறல்

தாரணிகொண்டவிருதோளொருவர்தனித்துழியென
வாரணிகொங்கைமணந்துசென்றார்தஞ்சைவாணனென்னார்
தேரணிவென்றசெழும்புகர்வேல்விழிதேனினஞ்சூழ்
காரணிமென்குழலாயதுவேகலுழ்காரணமே (௨௮௯)

தலைவனறெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்.

துதித்தேனணங்கொடுசூளுமுற்றேனென்றசொல்லைமெய்யா
மதித்தேனயர்ந்துமதியிலியேன்றஞ்சைவாணன்வையை
நதித்தேனினம்புணர்மாதர்கண்போலநகைக்குநெய்தற்
பொதித்தேனுகர்ந்தகலுங்கழிக்கானற்புலம்பர்வந்தே (௨௯௦)

# அறத்தொடுநிற்றல்.

வெறிவிலக்கியவழிசெவிலிபாங்கியைவினுதல்

மண்குன்றவந்தகலியினைமாற்றியமாணன்றஞ்சை
யொண்குன்றமங்கையர்முன்னர்மின்னேயுமையாண்மகனைப்
பண்குன்றவென்றசொல்வள்ளிதன்கோனைப்பைந்தாரயிலால்
வெண்குன்றெறிந்தசெவ்வேளையிவ்வாறென்விளம்பியதே. (௧௯௯)

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

போருறைதீக்கணைபோலுநின்கண்டுபோதவஞ்சி
நீருறைநீலமுநீயுநண்பாகெனறுநின்மகட்கோர்
தாருறைதோளவர்தந்தனர்வாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
காருறைசோலையில்யாம்விளையாடியகாலையிலே. (௨௱)

புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

ஒளிதோற்றியசொல்லலுன்மகளோதிக்குடைந்தகொண்டல்
பொழிதோற்றிரளுந்திவந்தசெந்நீருந்திப்பொற்பினுக்கோர்
சுழிதோற்றிநம்பகைதீர்க்கின்றபோதொருதோன்றலுமவ்
வழிதோற்றிவந்தெடுத்தான்றஞ்சைவாணன்றென்வையையிலே. (௨௱௧)

களிறுதருபுணர்ச்சியா லறத்தொடுநிற்றல்.

மண்ணலையாமல்வளர்க்கின்றவாணன்றென்மாறைவெற்பி
லண்ணலையாயிழபாகனென்றஞ்சினமஞ்சனந்தோய்
கண்ணலைநீரிடப்பாகமுமேல்வந்த[illegible]க்களிற்றின்
புண்ணலைநீர்வலப்பாகமுந்தோயப்பொருதவன்றே. (௨௱௨)

தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினுதல்.

தண்டார்தழுவியவேலண்ணல்வாணன்றென்றஞ்சைவெற்பில்
வண்டார்குழலிதன்வண்ணமுங்கண்ணும்வடிவுமுன்னாட்
கண்டாரறியும்படியனவேயல்லக்காரணமென்
றுண்டாலுயிரனையாய்பிசாமலுரையெனக்கே. ௨௱௩

செவிலிநற்றாய்க்கு முன்னிலைமொழியா லறத்தொடு நிற்றல்.

மலைவந்ததோவெனும வாரணவாணன்றென்மாறைமதிச்
சிலைவந்ததோவெனுநன்னுதல்பொருசெல்வரிங்கோர்
கலைவந்ததோவெனவந்துவினவிநங்காரிகைக்கு
முலைவந்ததோவில்லையோவென்னுநாளின்முயங்கினரோ. ௨௱௪

அறத்தொடுநிற்றல்- முற்றிற்று.

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்

மைந்நீர்நெடுங்கண்மடந்தையுடன்றஞ்சைவாணன்வெற்பா
செந்நீர்விழவணிநின்னகர்க்கேகொண்டுசேர்ந்தருண்மற்
றிந்நீர்மையல்லதொராறுமின்றுலி[illegible]கெம்மையொன்றுன்
முந்நீருலகுங்கொள்ளார்விலையாகமுலையினுக்கே ௨௱௫

தலைவனுடன்போக்குமறுத்தல்.

பாரோமுலைவிலையென்பர்நின்கேளிரென்பல்கிளைவா
ழூரோவணியதன்றெண்டொடி-சாய்விந்தையுண்கண்களோ -
தாரோவளரும்புயன்றஞ்சைவாணன்றறிபலர்போல்
யாரோதனிநடப்பாரருங்கானமிவளுடனே. ௨௱௬

பாங்கிதலைவனையுடன்படுத்தல்

சுருளேய்குழலுஞ்சுணங்கேமுலையுஞ்சுமந்துகற்புப்
பொருளேயெனச்சுரம்போதுமப்போதுபுகழ்வெயிலான்
மருளேய்கலிதீருண்மாற்றியவாணன்றென்மாறையினின்
னருளேயொழியவுண்டோவிழலாவதனைங்கினுக்கே ௩௱௭

தலைவன்போக்குடன்படுதல்

நஞ்சோவழலோவெனுஞ்சுரமோசெல்லநாடியவென்
னெஞ்சோகொடியதுநேரிழையாய்நிழன்மாமதியோ
மஞ்சோதவழ்மதில்சூழ்தஞ்சைவாணனவரையிலவம்
பஞ்சோவனிச்சங்கொலோவெனுஞ்சீரடிப்பைங்கொடிக்கே ௩௱௮

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்

பாலன்னபாயற்பகையெனுஞ்சீரடிபட்டுருவும்
வேலன்னகூர்ங்கண்மிதிக்குங்கொலென்றனர்மேதினிக்கு
மாலன்னவாணன்றென்மாறைநன்னாட்டுவயலுகளுஞ்
சேலன்னநீள்விழியாய்தெரியாதன்பர்சிந்தனையே. ௩௱௯

தலைவிநாணழிவிரங்கல்,

மறவாகைவேல்கைவரவாணனைமாறையர்மன்னனைத்தம்
முறவாகவெண்ணியுறாதவர்போலுயிரோம்பியென்றும்
துறவாதநாணந்துறப்பதுவெண்டவிற்றென்றலுலகிற்
பிறவாதொழிகநன்றேயொருகாலமும்பெண்பிறப்பே. ௩௱௰

கற்பின்மேம்பாடுபாங்கிகழறல்.

செங்காண்மலரிற்றிருவன்னகோலத்தெரிவையர்க்கு
நெய்ங்காணுயிரினுமிக்கதென்றால்விரவாவரசர்
தங்காண்முறைமைதவிர்த்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைநாட்
டங்காண்முமடவாய்கற்புநோக்கவழகிதன்றே. ௩௱௰௧

தலைவியொருப்பட்டெழுதல்.

பலரேசுமந்தவுரைகளுந்தாயர்தம்பார்வைகளுந்
திலரேசுமந்துதிரியவல்லார்செய்யசெண்பகநாண்
மலரோசுமந்தவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போ
லலரோசுமந்துசுமந்திருந்தவூர்பின்றழுங்குகவே. ௩௱௰௨

பாங்கிசுரத்தியல்புரைத்துழித்தலைமகள்சொல்லல்

செல்விற்கொடியகளிற்றண்ணல்வாணன்றென்மாறைமன்னன்
வில்விற்கொடியபுருவமின்னேயென்விளம்புதிநீ
சொல்விற்கொடியநம்மன்னனைப்போல்பவர்சூழ்ந்திருக்கு
மில்விற்கொடியசொல்லோசெல்லுநாட்டவ்விருஞ்சுரமே. ௩௱௰௩

பாங்கிகையடைகொடுத்தல்.

பறந்திருந்தும்பர்பணைப்பப்படரும்புரங்கரப்பச்
சிறந்தெரியாடிதென்றில்லையன்னடிறத்துச்சிலம்ப
வறந்திருந்துன்னருளும்பிரிதாயினருமறையின்
றிறந்தெரிந்தார்கவியுமுற்றும்வற்றுமிச்சேணிலத்தே. ௩௱௰௪

இதுபிறசெய்யுட்கவி-பாங்கிவைகிருள்விடுத்தல்.

பொழிநாணமன்றலம்பூங்குழனிங்கள்புணர்ந்துசெல்லும்
வழிநாடிநம்பின்வருகுவல்யான்றஞ்சைவாணன்வையச்

சுழிநாலுமூந்திநின்ருெல்கிளைக்கேற்பனசொல்லியின்
மொழிநாவடங்கமொழிந்தயலாண்முகங்கவிழத்தே. ௩௱௰௫

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

தளிபோற்கொடைபயில்சந்திரவாணன்றமிழ்த்தஞ்சையா
னளிபோற்குளிர்ந்தவிளமரக்காவுமகன்புசுழி
ஞெளிபோல்விளங்கியவெண்மணற்பாருமுவந்துகண்டு
நளிபோதவிழ்குழலாய்மெல்லமெல்லநடந்தருளே. ௩௱௰௬

தலைமகன்றலைமகளைச்சவறிந்திருத்தல்.

வரமாணைமேவற்படைவாணன்றென்மாறைவணங்கலர்கள்
புரமானவல்லழல்பொங்குவெங்கானிற்பொருந்தியகூ
ரமானகல்லுன்னடிமலராற்றலவாதவிஞெந்
சுரமாறுமெல்லைநல்லாயிருப்பாமிந்தச்சோலையிலே ௩௱௰௭.

உவந்தலர்சூட்டிரின்மகிழ்ந்துரைத்தல்.

அடிமலர்போற்றவும்போற்றியன்பாயிவளாய்முடிக்கியான்
கடிமலர்சூட்டவுங்காட்டியதாற்கள்வர்காப்பர்தெறியும்
துடிமலர்சிர்க்கெதிர்கூகைபிரட்டுஞ்சுரத்திடையோர்
வடிமலர்வேற்படையான்வாணன்மாறையென்மாதவமே. ௩௱௰௮

கண்டோர்யிர்த்தல்

சையத்திரள்புயன்சந்திரவாணன்றனிபுரக்கும்
வையத்துறைநின்றமாவிடரோவன்றிவானவரோ
கையப்படுமழல்வெஞ்சுரத்தூடுநடந்தவரென்
றையப்படுவதல்லாலுண்மைசாலவறிவரிதே ௩௱௰௯

கண்டோர்காதலின்விலக்கல்

மாலுந்திருவுமெனவருவீர்தஞ்சைவாணன்றெவ்வூர்
போலுஞ்சுரமெனிப்போகவொண்ணுதுபொருப்படைந்தா
லுமபுரவியருக்கனிக்கங்குலடற்கடமான்
பாலுந்தசையுமுண்டேதங்குவீரெங்கள்பாடியிலே ௩௱௨௰

கண்டோர்தன்பதியணிமைசாற்றல்

தொடங்கும்பிறைநுதற்றேருகையுநீர்முன்றேன்றுகின்ற
கடங்குன்றிரண்டுங்கடந்துசென்றுற்கமலந்தடமுங்
கிடங்கும்புரிசையுஞ்சூழ்நதெதிர்தோன்றுங்கிளைத்தபைந்தார்த்
தடங்குங்குமநெடுந்தோள்வாணன்மாறையுந்தஞ்சையுமே ௩௱௨௰௧

தலைவன்றன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்

சந்தனந்தோய்ந்துதயங்குமுத்தாரந்தரித்துவிம்மு
நந்தனந்தாங்கிநடுங்கிடைபோலநடந்திங்ஙனே
நொந்தனங்காலென்றுநோவல்பொன்னேயொருநோயுமின்றி
வந்தனங்காணிதுகாணன்மாறைவளநகரே ௩௱௨௰௨

உடன்போக்கு-முற்றிற்று.

கற்பொடு புணர்ந்த கவ்வை.

செவிலிபாங்கியை வினுதல்

நலம்புனையாயமுஞ்சீரிநற்றுயொடுநானுநற்பொற்
சிலம்புயர்சோலையுஞ்சிற்றிலுட்டேரிலுந்தேடிப்பேட்டிலே

வலம்புரியூர்வயல்சூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
புலம்புறமாதரெங்கேமகளேதனிப்போயினளே ௩௨௩

பாங்கி செவிலிக்குணர்த்தல

வெறுத்தாரொறுத்துரைமேலுங்கேளீர்விழைதலின்றி
மறுத்தாரவற்குமணமதனூற்றஞ்சைவாணர்பிரான்
கறுத்தார்புரத்துநடந்தனள்காளைபின்காமர்கற்பாற்
பொறுத்தாளழற்சுரந்தன்னையன்னாய்நின்பொலங்கொடியே ௩௨௪

செவிலிதேற்றுவோர்க்கெதிரழிந்துமொழிதல.

மாறுவளவயல்சூழ்தஞ்சைவாணன்றென்மாறையன்ன
நூறுவருநதுயராற்றுகின்றீரறிவேகொளுத்தி
யூறுவனகடிநதென்முலையூறமிர்தூட்டியின்சொற்
கூறுவளர்த்தகம்கோவென்னைநீத்தவென்கோலவளையே ௩௨௫

செவிலிதன்னறிவின்மைதன்னைநொநதுரைத்தல

வழியாவரும்பெருநீர்த்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
கழியாதவன்புடைக்காளைபின்னாளைக்கலநதுகொண்டல
பொழியாதவெஞ்சுரம்போகுவலயானென்றுபோங்குறிப்பா
லொழியாதென்முன்புசொன்னாள்பேதையேனுள்ளறையோர்நதிலனே ()

செவிலிதெய்வம்வாழ்த்தல.

இணங்கிப்புவனத்தெவருமிலலாவென்னிளங்கொடியா
லுணங்கிக்கழிதலொழியவென்பாலவரவுன்னையன்பால
வணங்கிப்பலமுறைவாழ்த்துகின்றேன்றஞ்சைவாணன்றெவ்வை
யணங்கித்திரள்புயத்தான்மலயாசலந்தாரணங்கே ௩௨௭

செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றல

சகநலகவந்தருள்சநதிரவாணன்றென்றஞ்சைநலலாய்
முகநலகிநலகமுலைகொடுத்தாரின்முத்தங்கொடுத்தார்
மிகநலலரென்பதுமன்பதைதேறவிடலைபின்னே
மகநலகுமநதியங்கானடநதாளுன்மடநதையின்றே ௩௨௮

நற்றாய்பாங்கியதன்னொடுபுலம்பல.

முன்னேயிதனைமொழிநதனையேனுநதைமுநதைமணம்
பின்னேய்குழலிபெறுளல்லளேபிறழாதெவர்க்குந
தன்னேயம்வைத்தருளுஞ்சைவாணன்றமிழ்ச்சிலப்பிற்
பொன்னேயனையநலலாயவமேசுரம்போக்கினையே ௩௨௯

அதுகேட்ட பாங்கியழுங்கலகண்டு நற்றாய்ப்புலம்பல

இலலுங்கழங்காடிடங்களுநோக்கியிரங்கலவம்பும்
வலலும்பொருங்கொங்கைமங்கைநலலாய் தஞ்சைவாணனென்னூர்
புலலுநதுணைவியர்போலவினையேன்பெற்றபூவையன்னாள்
செலலுஞ்சுரத்தழலன்றுன்கண்ணினீர்நின்றதே. ௩௩௰

நற்றாய்பாங்கியர்தம்மொடுபுலம்பல

நேயம்புனைதுணையாகவெங்கானகநீந்தலெண்ணி
யாயம்புலம்பவகன்றனளோகல்லகங்குலழுய
மாயம்புகலொருகாளைபின்வாணன்றென்மாறையன்னீர்
சேயம்புலமலர்போலடிநோவவென்சில்வளையே. ௩௩௧

நற்றாயயலார்தம்மொடுபுலம்பல்

மேனாள்வரக்கிடந்தென்போல்வருந்திமிகவுமெய்ந்நொந்
தீனாதவர்துன்பமெய்துவரோவிமையோருலாக்
தானாணநீடுமதிற்றஞ்சைவாணன்றமிழ்ச்சிலம்பின்
மானார்விழியனையாள்விளையாடியவண்டல்கண்டே. ௩௩௨

நற்றாய்தலைமகள்பயிலிடந்தம்மொடுபுலம்பல்.

செயலைத்தருவின்றிருநிழலேபெருஞ்சிற்றில்லமே
வயலைங்கொடிநொச்சிமண்டபமேதஞ்சைவாணனென்னு
றியலைத்தணித்தனிதந்தனளேநமக்கின்றிதன்றோ
கயலைப்பொருதகண்ணாண்மேலும்வாழ்விக்குங்கட்டளையே. ௩௩௩

நிமித்தம்போற்றல்.

கடியேய்புகரமுகவாளவலவாணன்றென்மாறையுள்ளா
னடியேதொழுந்தெய்வமாகநிற்பேணியரும்பலியிப்
படியேதருகுவலென்றுமின்னேயிப்பதியுவகைக்
கொடியேவரக்கரைநீகொடியேன்பெற்றகொம்பினையே. ௩௩௪

சுரந்தணிவித்தல்.

வெஞ்சுரநாடுவியன்சுரலோ[illegible]ழும்வெங்கடுங்கா
னஞ்சுரதாருவனங்களுமாகவகிற்புகைபோன்
மஞ்சுரவாடகமாமதில்சூழ்தஞ்சைவாணன்வெற்பிற்
பஞ்சுரமாகுமொழிச்சுருளோதியென்னபைந்தொடிக்கே. ௩௩௫

தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

தாமேதமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணனிச்சப்
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குநங்காயெரியுந்
தீமேலயில்போற்சுறிப்பரற்கானிற்சிலம்படிப்பா
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே. ௩௩௬

இதுபிறசெய்யுட்கவி—இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல்.

இரும்பாமனங்கொண்டவாறென்னைநீதன்னையேத்தியென்றும்
வரும்பாவலர்க்கருள்வாணன்றென்மாறைவளவயலிற்
கரும்பார்மொழியாயழலென்றுகண்ணீர்துடைத்தணைத்துன்
னரும்பாமுலைசெய்யவாய்ப்பசும்பாவைக்களிக்குமின்னே. ௩௩௭

அச்சத்தன்மைக்கச்சமுற்றிரங்கல்

நாண்மாதவிமலர்நாறிருங்கூந்தனடந்தவழிக்
கோண்மாகுமிறுங்கொடுங்குரல்கேட்டொறுங்கூர்ங்கணையால்
வாண்மாமுனைவென்றவாணன்றென்மாறைமணிவனவேய்த்
தோண்மாவெருவுங்கொல்லோவென்றென்னுயிர்சோர்கின்றதே. ௩௩௮

கண்டோரிரக்கம்.

நொந்துங்கலுழ்ந்துந்துணைவியராற்றலர்நோக்கொடின்சொற்
றந்துங்கவையுந்தணந்துசென்றாளெனத்தாள்பணியார்
மைந்துங்கதமுங்கடிந்தருள்வாணன்றென்மாறையன்னாள்
பந்துங்கழங்குமெல்லாங்கண்டுவாடும்பயந்தவளே. ௩௩௯

செவிலியாற்றாத்தாயைத்தேற்றல்.

நன்றேயிதென்றுமுகமுகநோக்கிநகைநகையா
மன்றேயலர்சொல்லுமாதர்முன்னேதஞ்சைவாணன்றெல்சீர்

சென்றேபரந்திசைகளெல்லாஞ்சென்றுதேர்ந்தணங்கை
யினறேதருவனன்னைவருந்தாதிங்கிருந்தருளே ௩௪௰

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினுதல்

ஒருவெண்குடையிருநீழன்முக்கோல்கொண்டொழுக்கத்தினு
வருவெங்களரியைர்நாறுசெல்வீரருளீரொழுபார்
மருவேண்டிசைபுகழ்வாணன்றென்மாறையென்வஞ்சியன்னாள்
பெருவெஞ்சுடரிலைவேலொருகாளைபின்போயினளே. ௩௪௧

மிக்கொரேதுகாட்டல்.

இயங்காவனமென்மகளொருகாளைபின்னேகினளென்
றுயங்காதொழியுஃதுலகியல்பாலுலவும்புயமேறும்
வயங்காடகமதில்சூழ்தஞ்சைவாணன்மணங்கமழ்தார்ப்
புயங்காதகொண்டணைந்தாளயனார்தங்கபூமகளே. ௩௪௨

செவிலியெயிற்றியொடு புலம்பல்.

செருமகளேயும்புயத்தயலான்பின்செலவிடுத்தென்
னொருமகளேயென்றுனையுயிர்த்தேன்புனையோவியம்போல்
வருமகளேதஞ்சைவாணனென்னார்துன்னும்வன்சுரத்தோ
ரருமகளேயுரையாயவள்போனவதரெனக்கே. ௩௪௩

செவிலிகுரவொடுபுலம்பல்

இரவேய்குழலியிவ்வேதிலன்பின்செலலென்றுசொல்லாக்
குரவேயரவுங்கொடிணைகண்டாய்கொடிகோகனகந்
தரவேபெனவந்தசந்திரவாணன்றரியலர்போஞ்
சுரவேய்நல்வழியேதனிப்போயவென்பேதையையோ. ௩௪௪

கவடுகண்டிரங்கள்.

தொடுசிலைக்கானவரோடியவேற்றுச்சுவடுவையே
யடுசிலைக்காளையடியவையேயறிந்தோரறிய
விடுசிலைப்பார்புரக்குந்தஞ்சைவாணனிசைக்குருகப்
படுசிலைப்பார்வைபதமிவையேவண்டுபாடுகவே ௩௪௫

செவிலிகலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்

யானகம்போதவருந்தம்மேபோல்வனப்பெய்திவெய்ய
கானகம்போயினர்கண்டனிரோகற்பகடாவிசூழ்
வானகம்போர்மயில்வானவற்கிந்தருள்வாணன்றஞ்சைத்
தேனகம்போருகமாதனையாளுமோர்செல்வனுமே. ௩௪௬

அவர்புலம்பதேற்றல்.

யான்கண்டவண்ணலுமெண்ணருங்கற்தலிமேனகியுமென்
மான்கண்டனகண்மயில்கண்டமாதருமாதருமந்
தான்கண்டதண்ணளிச்சந்திரவாணன்றரியலர்போங்
கான்கண்டமெய்குளிரப்பொய்கைசூழ்தஞ்சைகாண்பர்களே. ௩௪௭

செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தல்

நாணினுந்தாரணிகற்புநன்றென்றுநயந்துமுத்தம்
பூணினுப்பாரமென்னுமொன்பொன்னையிப்போதெனக்குச்
சேணினுஞ்சார்புகழ்வாணன்றென்மாறைமன்சோரலைநாக
காணினுங்காணவந்தோவரிதாவிந்தக்கானிடையே ௩௪௮

கற்பொடுபுணர்ந்தகவ்வை-முற்றிற்று.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

ஏடார்மலர்க்குழல்வல்லியையன்னையித்தீவினையே
நாடாவிடமில்லைஞாலத்தகல்வயினன்கமலக்
காடார்பழனக்கழனிநன்றுகடந்துதன்னூர்
வாடாவளமனைக்கொண்டுசென்றாளொருவள்ளலின்றே. ௫௪௯

இதுபிறசெய்யுட்கவி.

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றல்

வினைபானெதிர்ப்பட்டநீடிருங்குன்றிதுகீகுடைந்த
சுனையாமதுமலர்ச்சோலைகளாமவைதூயவண்டன்
றுனையாமிவையினிவாணன்றென்மாறையைவாழ்த்தலர்போர்
வினையாதெழுந்தருண்மானனையாய்நம்மெழினகர்க்கே. ௫௫௰

தலைவிமுன்செல்வோர் தம்மொடுதலை.
பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்

புனையல்கோதிலர்காதலர்தாயர்பொறுமையிற்போ
இனைதுயர்யாதொன்றுமின்றிவெங்கானிகந்தியானுமம்பொன்
வனைகழலானும்வருவதெல்லாஞ்சென்றுவாணன்றஞ்சைத்
துணைவுடனேகுகின்றீர்சொல்லுவீரொன்றுணைவியர்க்கே. ௫௫௧

முன்சென்றோர் பாங்கியர்க்குணர்த்தல்.

போதலர்ந்தல்லைமுனியுமெல்லோதிப்புனையிழைதன்
காதலன்பின்வரக்கண்டனம்யாங்கண்டல்வேலிமுந்நீர்
மாதலத்தன்னிருதோள்வைத்தவாணன்றென்மாறைவண்ணச்
சூதலர்ம்தொல்கவிம்பித்தரண்மாமுலைத்தோகையரே- ௫௫௨

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்

வாளேய்விழியின்மயிலனையாடஞ்சைவாணன்வெற்பில்
வேளேயனையவிடலைபின்னேசுரமீண்டிநங்
கேளேய்பதிவருமென்னநல்லோர்சொல்லக்கேட்டனமிக்
காளேயனையநன்றுளவோசென்றநாள்களிலே. ௫௫௩

நற்றாய்கேட்டவனுளங்கோள்வேலனைவினாதல்

தென்மாறைநன்னகர்மன்னவன்வாணன்செழுந்தஞ்சைசூழ்
பொன்மாதிரத்துப்புலனுணர்வீர்சுரம்போய்வருவோ
னென்மானையென்மனையிற்றருகோதன்னையீன்றநற்றாய்
தன்மாநகருக்குமோசொல்லுவீரொன்றுதானெனக்கே ௫௫௪

மீட்சி-முற்றிற்று.

தன்மனை வரைதல்.

நற்றாய்மணனயாவேட்கையிற்செவிலியைவினாதல்.

சீரறுகாலனங்செற்றார்திபாகர்சிலம்பனையாய்
நேரறுகாளையையீன்றாருங்கீதுநிகழ்த்துவமோ
வோரறுகால்வண்டுறைகுழன்மானையுயர்மணஞ்செய்
தீரறுகாற்றெய்வநன்னீர்தெளிக்கநம்மில்லினினென்றே. ௫௫௫

இதுபிறசெய்யுட்கவி.

செவிலிக்கிகுளைவரைந்தமையுணர்த்தல்

என்றுமியம்புவதியாய்க்கினிநாமன்னையின்றுநம்மிற்
கொன்றாநுதித்திலககோதைநம்மாதைக்கொடிநெடுந்தேர்க்

கன்றுடர்மண்கொண்ட வாணன்றென்மாறையிற்காதலர்தா
நன்றுண்மணப்புணர்ந்தாரென்றுதூதர்நவின்றனரோ. ௩௫௬

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.

எனைக்கேளிருமின்றியற்றவங்கேமணவின்பமெய்தி
யனைக்கெண்மைநண்ணியவண்ணம்பின்றுகநம்மன்னையின்றிம்
மனைக்கேவருமெனவந்துசொன்னார்தஞ்சைவாணன்வெற்பிற்
சுனைக்கேய்நனைக்கமழுநீர்க்குழலாய்சிலதூதரின்னே. ௩௫௭

தலைவன்பாங்கிக்கியான்வரைந்த
மைநுமர்க்கியம்புசென்றென்றல்-

கோபுரஞ்சோலைக்கொடிமதின்மாடங்குலாவிமையோர்
மாபுரம்போலுந்தென்மாறைவரோதயன்வாணன்வெற்பி
னீபுரந்தேதந்தமாதங்கியாம்வரைநீர்மைபொன்செய்
நூபுரஞ்சூழடியாய்சென்றுகூறுநுமர்தமக்கே ௩௫௮

பாங்கிதானதுமுன்னேசாற்றியதுரைத்தல்

அன்னைக்கியம்பினன்றண்டகையான்முன்னநீந்துதென்னன்
றன்னைப்பணிந்துகுற்றேவல்செய்பாதுசமர்க்கெழுந்த
மன்னைப்புறங்கண்டவாணன்றென்மாறைவரையிலெங்கள்
பொன்னைப்புணர்ந்ததுநுங்கேண்முன்னர்நீபொன்புனைந்ததுவே. ௩௫௯

தன்மனைவரைதன்முற்றிற்று.

உடன்போக்கிடையீடு.

நீக்குங்கிழத்தி பாங்கியர்தமக்குத்தன்செலவுணர்த்திவிடுத்தல்.

வள்வேய்மிடைந்தவழிப்படர்வீர்செங்கைவாணன்றஞ்சைத்
தளவேய்நகையென்றுணைவியர்பாற்சென்றுசாற்றுமினபோர்க்
களவேளனையவோர்காளைபினபோயினள்கானபனிநீத்
தெள்வேனில்வல்லிபெற்றாய்க்கெவ்வநீத்தெழிலெய்தியன்றே. ௩௬௰

தலைமகனசெல்வினைமுட் குணர்த்திவிடுத்தல்.

வாயாரநுங்களைவாழ்த்துகினறேனறஞ்சைவாணனவெற்பிற்
சாயாதமாதவத்தாழ்சடையீரனபர்தம்மொடினறியான
சேயாறுதேர்மிசைச்செல்வதெல்லாமெங்கள்சேரியிற்சென்
றியாயாகியகொடியாட்கினிதாகவியம்புமின்னே. ௩௬௧

நற்றாய்க்கந்தணர்மொழிதல.

மருள்கொண்டசிந்தைநமைக்கிழவோய்தஞ்சைவாணன்வெற்பில
வெருள்கொண்டமென்பிணைவென்றகண்ணாள்வென்றிவேலவலங்கை
யருள்கொண்டநெஞ்சினொருவன்பின்னேகன்றுளகலவா
னிருள்கொண்டகொண்டலசெலலாவாரைசூழுமிருஞ்சுரத்தே. ௩௬௨

(நற்றாய்பறந்தொடுநிற்றவர்பின்சேறலைத்தலைவிகண்டுதலைவர்க்குணர்த்தல்(

உவலைப்பரூக்கைகமுரம்புசெல்லாமலுலகமங்கை
தவலைத்தவிர்த்தத்தமிழ்தஞ்சைவாணன்றரியலர்போங்
கவலைக்கடத்துச்சிலைத்திரைசேலிக்கடும்பகழித்
துவலைப்படைக்கடற்றேன்றல்பொற்றேர்வங்கஞ்சூழ்கின்றதே ௩௬௩

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்.

ஆறலைவெஞ்சிலைக்கானவரேலென்கையம்பொன்மிறு
னாறலையஞ்சலைநுண்ணிடையாய்நுமரேவர்முன்

சேறலைபஞ்சுவல்செல்லல்லைபம்பூகச்செழும்பழுக்காய்த்
தாறலைதண்டலைசூழ்தஞ்சைவாணன்றமிழவெற்பிலே. ௫௬௪

தம்முடன்செல்பவளவன்புறநோக்கிக்கவன்றுரைத்தல்.

ஏமானெனவஞ்சுமேற்காத்தலினவ்விரவிபொற்றேர்
வாமானின்வாழ்வனவாசபன்னாட்டஞ்சைவாணனென்னார்
போமானதரிடத்தென்னையர்தோன்றப்புறங்கொடுத்த
சேர்மான்மணிநெடுந்தேர்நுகம்பூண்டகுரசதமே ௫௬௫

உடன்போக்கிடையீடுமுற்றும்.

(வரைதல்.)

சென்றோன்மீண்டுவந்தண்ணாயுஞ்சான்றோரையுமுன்னிட்டு

வரைந்துகொண்டுழிக்கண்டோர்மகிழ்ந்துகூறல்.

சேலார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றென்மாரையினம்
வேலானெனப்பிறர்வேட்டவர்யார்மணம்வெண்டுகிலின்
பாலாரமளியும்பாற்கடலானதுபங்கயக்கண்
மாலாயினனிவனுந்திருவாயினண்மாதருமே ௫௬௬

வரைதல்-முற்றும்.

இல்வாழ்க்கை—தலைவன்றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்.

நின்மேலடுத்தபசலையின்காரணநின்றுணைவி
என்மேலடுத்தவியல்பினன்றேபெற்றதேழுலகுக்
தன்மேலடுத்தபுகழ்தஞ்சைவாணன்றமிழ்க்கிரிநுண்
பொன்மேலெடுத்தனபொற்சுணங்கின்றபுணர்முலையே ௫௬௭

தலைவனைப்பாங்கியன்வாழ்த்தல்

தெரியாடகவிதழ்ப்பூங்கொன்றைவேணியுந்தேவியும்போற்
பிரியாதுறையப்பெறுசுதிராற்பிறைமானுநெற்றிப்
புரியாழ்நிகர்மொழிப்பூவையுநீயும்புணர்ந்தபல்கேழ்
வரியார்சிலையண்ணலேதஞ்சைவாணன்றென்மாறையிலே ௫௬௮

பாங்கிதலைவியைவரையுநாளளவும்

வருந்தாதிருந்தமையுரையாயென்றல்

கோங்கனன்மாமுகைக்கொங்கைநல்லாய்மணங்கூடுமெல்லை
யாங்கனமாற்றியிருந்தனைநீயிப்மாசயிலங்
தாங்கனமாறத்தலம்புனைவாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கனமார்குழலாரலர்மாலைப்பொறைசுமந்தே. ௫௬௯

பெருமகளுரைத்தல்

மைதோய்ந்தலர்ந்தமலர்த்தடஞ்சூழ்தஞ்சைவாணனென்னார்
மெய்தோய்ந்தசெந்நிறவேல்விழியாய்துயர்வெள்ளம்பெற்பார்
கைதோய்ந்தளிப்பவசோகத்தவாய்நிறநகால்வனவாய்
நெய்தோய்த்தனதழையேபுணையாக்கொண்டுநீந்தினமே ௫௭௰

தலைவனைப்பாங்கிவரையநாளளவு.

(நிலைபெறவாற்றியநிலைமைவினாதல்.)

வரையுமிந்நாளளவிவ்வாறுநீமொம்மடந்தைமுகை
புரையமென்கொங்கைபிரிந்திருந்தீர்முன்பொருப்பெடுத்தே

நீணாயுமின்ஞாலமுங்காத்தருட்டானன்பதாகையினீ
டிணாயுங்குயிலும்விடாதெழுமோசைசெவிமடுத்தே ௩௭௧

இதுபிறசெய்யுட்கவி.

மன்றன்மனைவருசெவிலிக்கிளையன் புறவுணர்த்தல்.

வளங்கொண்டதஞ்சைவரோர்மயன்வாணன்றென்மாறையன்ன
விளங்கொழுங்கொண்டுழு திரங்கொண்மார்பினமுத்தேற்பவித்தி
விளங்கொண்பிறைநுதல்வேர்தந்துபோகம்விளைத்தன்புசே
ருளங்கொண்டருந்துதலாலன்னையூரனுவப்புறுமே. ௩௭௨

பாங்கியில்வாழ்க்கைநன்றென்செவிலிக்குணர்த்தல்.

சினவேய்சுளியுங்களிற்றண்ணல்வாணனென்மாறையினம்
மனவேயகலல்குல்வல்லியன்னாண்மறையோர்முதலாஞ்
சனவேதனைகெடத்தானங்களீதலிற்சாலவுநன்
றெனவேநடக்கின்றதாதன்னைநாடொறுமில்லறமே ௩௭௩

மணமனைச்சென்றுவந்தசெவிலிபொற்றொடிக்
கியனற்றாய்க்குணர்த்தல்.

ஒன்றேநமக்குவந்தெய்தியநன்மையிடனைதீர்ந்தார்
வன்றேமன்னர்வென்றவாட்படைவாணனறென்மாறையில்வாழ்
கின்றேனகற்பினிலைமைபெண்ணுதெதிர்நின்றுவென்னிட்
டன்றேவடக்கிருந்தாண்மடப்பாவையருந்ததியே ௩௭௪

நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

விண்மேலமரர்விரும்பமராவதிவெள்ளமுந்நீர்
மண்மேலடைந்தன்னவாழ்க்கையதானதுவாணன்றஞ்சைப்
பண்மேலளிமுரல்குங்குமத்தோளவர்பங்கயம்போற்
கண்மேலருள்பெற்றுவாழ்மடமாதர்கடிமனையே ௩௭௫

செவிலிநற்றாய்க்கிருவர்காதலையுமறிவித்தல்.

நனையகத்தல்கியநாண்மலரோதிநயந்துறையு
மனையகத்தல்லிடைவைகுதலாற்றஞ்சைவாணனென்னார்
வினையகத்தல்குதல்செல்லுவரோநுவ்வேந்தர்போற்றோர்
முனையகத்தல்கல்செல்லாதொருநாளுமுகி[illegible]கையே ௩௭௬

இல்வாழ்க்கைமுற்றிற்று.

பரத்தையிற்பிரிவு—காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ்விறைவிக்கென்றல்.

மாறையர்காவலன்வாணன்றென்றஞ்சையில்வாணுதற்கிவ்
வாறையர்காரணமாகுமென்றேகொங்கையானையுடன்
சாறையர்வீதிபரிப்பறையார்ப்பத்தயங்குகுழற்
கூறையார்கூறைகொள்வான்வயலூரனைசசூழ்ந்தனரே ௩௭௭

[illegible]ளித்துழியிறைவிதுனிகதழுதிரங்கல்.

வன்போதணிதொங்கல்வாணன்றெனமாறைமகிழ்நர்நம்மே
லன்போடுநன்னெஞ்சறிவறைபோகவழலுள்வேந்த
பொன்போனிறங்கொண்டிரவுங்கண்ணீரும்புலர்வதுபார்த்
தென்போலவரிக்கனைவிமையாமலிருப்பரோ ௩௭௮

ஈங்கிதுவென்னெனம்பங்கிவினைதல்.

எம்மாதிரமும்புரவலர்தேடியிரந்துழல்வோர்
தம்மாதுயரந்தணித்தருள்வாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவியன்னவர்நாடோறுநாடொல்கவுநீ
விம்மாவருந்துவதென்பிரிந்தாரின்விளங்கிழையே ௩௭௯

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

தாராகநல்கினர்காரிகையாய்தஞ்சைவாணன்றன்னைச்
சேராவொன்னத்தீவினையேனையச்செங்கண்வன்கட்
காராகழனிக்கப்பினஞ்சாயக்கதழ்ந்துசொ்நெ
லாராதயலிற்பஞ்சாயாருமூரரயலவர்க்கே ௩௮௰

தலைவியைப்பாங்கிகழறல்.

புனையலங்காரநங்கற்பியல்போற்றியும்போற்றருஞ்சீர்
மனையருப்பாவித்தும்வாழ்வதெல்லாற்றஞ்சைவாணனன்னு
டனையவண்டார்குழலாரணங்கேநமக்கன்பரிந்நா
ளினையவொன்றாமில்லாவுனாயாடலியல்பல்லவே. ௩௮௧

தலைவிசெவ்வணிந்து சேடியைவிடுப்புழியல்
வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்.

வேளான்பரவிளக்கியவாணன்மின்னார்கழல்சூழ்
தாளான்வளங்கெழுதஞ்சையன்னீர்சங்கந்தந்தநன்னீர்
தோளாமணியன்னதொல்குலவோடையிற்றோன்றியபூ
வாளாவலர்தொடுப்பார்க்கெங்ஙனேவந்துவாய்த்ததுவே ௩௮௨

பரத்தையர்கண்டுபழித்தல்.

படியொன்றுசாலியனையவர்சேரிப்படர்பவளக்
கொடியொன்றுநீலமர்ந்ததுகாட்டக்கொடியவெப்போர்
வடியொன்றுகூரிலைவேல்வல்லவாணன்றென்மாறையிற்போர்
முடியொன்றுதொண்டவார்சேரிவாய்வந்துதோன்றியதே ௩௮௩

பரத்தையருலகியனோக்கிவிடுத்தலிற்றலைவன்வரவு.

கண்டுவந்துவாயில்கண்மொழிதல்.

வாருந்துபச்சிளநீர்முலையார்மதன்வாணன்றஞ்சை
யாருந்தொழுத்தகுமெய்ப்பெருமாட்டிதன்னேவலினும்
சேருப்பரத்தையர்சேரியிலேசென்றசேடியைக்கண்
டூருந்திரைப்புனலூரன்வந்தானின்றுலகியற்கே ௩௮௪

தலைமகன்வரவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

தள்ளாவளவயல்சூழ்தஞ்சைவாணன்றரியலர்போ
லுள்ளாதுனைப்பண்டகன்றனராயினுமுள்ளியிப்போ
தெள்ளாதுவந்துன்கடையினின்றார்நம்மிறைவர்குறங்
கொள்ளாதெதிர்கொள்வதேகுணமாவதுகோமளமே ௩௮௫

தருவனைத்தலைவியெதிர்கொண்டுபணிதல்.

மருவிற்பெருநலமன்னுவதாந்தஞ்சைவாணன்வெற்ப
னொருவிற்பசலையுருக்குவதாநமக்கூடலெவ்வா
றிருவிற்புருவவிளச்கொடியேயெய்துமெய்தலில்லாத்
திருவிற்புனைநறுந்தார்வரைமார்பர்திருமுனின்றே ௩௮௬

புணர்ச்சியின்மகிழ்தல்.

மன்னவர்காமநெடுங்கடல்வாணன்றென்மாறையன்ன
டொன்னலம்வார்முலைமத்தந்தழீஇயித்துடங்தோளிணையாம்
பன்னகநாணிற்கடைந்திதழ்வார்திரைபபட்டநன்னீ
ரின்னமிழ்தார்ந்திமையோரமையாவின்பமெய்தினரோ ௩௮௭

வெள்ளணியந்துவிடுத்துழித்தலைமகன்வாயில்வேண்டல்.

என்பாற்குறையைநினைந்துமறுதெதிர்கொள்ளவல்லே
தன்பார்புலவிதணிசென்றுநீதஞ்சைவாணன்வைய
மன்பாற்பரவும்புகழுடையனருளேயனையா
யுன்பாற்புலவிபுரிவள்வண்ணவார்குழலொண்ணுதலே ௩௮௮

தலைவிநெய்யாடியதிகுளைசாற்றல்.

மலர்புனையோர்கொண்டவாட்கணெங்கோமங்கைவாணன்றஞ்சைப்
பலர்புகழ்பாலைப்பயந்துநெய்யாடினள்பாங்கெவர்க்கு
மலர்புனைநீடொளியாடியுட்பாவைபன்றாட்குளநீர்
புலர்புனலூரவென்றேதிருவுள்ளமிப்போதுனக்கே

தலைவன்றன்மனத்துவகைகூர்தல்.

மையணிவேல்விழிவாணுதல்கூர்ந்ததுவாணன்றஞ்சைக்
கொய்யணிநாண்மலர்க்கொம்பரன்னாள்குழவிப்பயந்தே
நெய்யணிமேனியிலையவிபூண்டநிலையறிந்தே
கையணிவால்வளையைக்கண்டநாளினுங்காதன்மையே

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

ஏரார்புதல்வன்பிறந்தனன்வாழியவென்னுமுன்னே
வாரார்வளமனைவந்துநின்றார்கங்குல்வாணன்றஞ்சை
நீராவிநீலநெடுங்கண்மின்னேநின்னைநீப்பதல்லாற்
றேராதொழிகுவரோபெரியோர்தஞ்சிறுவனையே

தலைவியுணர்ந்துதலைவனொடுபுலத்தல்.

வயங்கேழுலகும்புரக்கின்றவாணன்றமிறன்மாறையன்ன
நயங்கேழ்பெருவளநல்குநல்லூரநயந்துநண்ணி
முயங்கேல்சிறுவற்பயந்தவென்மேனியின்முத்துவடந்
தயங்கேரகமுழுதும்பழுதாந்துதானினக்கே

தலைவிபாணனைமறுத்தல்.

தலையாகியதன்மையூரற்றுவாணன்றமிழ்த்தஞ்சைசூழ்
மலையாகியமதில்வையைநன்னாட்டெங்கைமான்படுக்குங்
கலையாகுநின்னிசைக்கண்ணிக்கொண்டேதிரிகன்றின்னிப்
புலையாடக்கமெம்மிற்போகபோகபுறங்கடையே

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்

நினக்கேதகுநின்னெடும்பணலூரனுநீயுமவன்
றனக்கேதகுநைவதமிழ்த்தஞ்சைவாணன்றடங்கிரிசூழ்
புனக்கேகயமன்னநின்னடிபோற்றிப்புகன்றகன்று
ஒமனக்கேதகுமிகைபாலெம்பிராட்டியெறிந்தகல்லே ௩௯௪

விறலிவாயின்மறுத்தல்.

வண்புனலூர்வையைசூழ்தஞ்சைவாணனைவாழ்த்தலர்போற்
கண்புனலூருமென்காதல்கண்டேநின்கடைத்தலைக்கே
தண்புனலூரன்வந்தானென்றுசாற்றினைதானமுறப்
பண்புனலூர்களெல்லாம்பாடியேற்றுண்ணும்பாணமகளே ௩௬௫

விருந்தொடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

புரவேயெதிர்ந்தநமக்குவிருந்தின்றுபோலவென்றும்
வரவேபுணர்ந்தநம்மாதவம்வாழியவாணன்றஞ்சைக்
குரவேய்கருமுகிற்கொந்தளபாரங்குரும்பைகொங்கை
யரவேய்நுடங்கிடையாள்விழியூர்சுவப்பாற்றுதற்கே ௩௬௬

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச் சிறை
தென்றவள்சீரடிதொழுதல்.

தெரியோர்பொருட்டன்றுதேர்வின்றியூடல்செயிர்த்தவர்க்குக்
கரியோர்தெளித்தென்னகாரணங்காட்டுவர்காவுண்டுதேன்
வரியோர்தொடைப்புயன்வாணன்றென்மாறைமலர்த்திருவே
பெரியோர்பொறுப்பரன்றேசிறியோர்கள்பிழைத்தனவே ௩௬௭

இஃதெங்கையர்காணினன்றன்றென்றல்.

எண்பெனநெஞ்சிமுநீருமென்பாதமிறைஞ்சதனுங்
கண்போலுமெங்கையர்காணினன்றேமுகபன்மாதிரத்துத்
திண்போதசந்தொறுச்சீட்டியவாணன்செழுந்தஞ்சைசூழ்
வண்போதளவிதநீர்வையைநாட்டுறைமன்னவரோ ௩௬௮

அங்கவர்யாரையுமறியேனென்றல்.

மன்னும்புலவியைமாற்றியுந்தேற்றியும்வல்லவண்ண
மின்னுந்தெளிந்திலையென்னேயென்னேசெய்கேனிதற்கு
முன்னும்படிந்துமுழுகுநன்னீர்க்கங்கைமுன்னுறைய
மன்னம்மடியுநங்கொலலோவுவராலாரணங்கே ௩௬௯

இது பிறசெய்யுட்கவி.

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.

போயேதெருவிற்றனிவிளையாடும்பதல்வற்புல்ல
நீயேதிலையல்லைநின்மகனேயிவனியுமவன்
றாயேவருகெனச்சேர்பன்னவாணன்றமிழ்த்தஞ்சைமா
னேயேயெனநிற்றலானறித்துதன்றன்னையேங்கையென்றே ௩௭௰

தலைவியைப்பாங்கிகணித்தல்

மாவாரணமன்னவாணன்றென்மாறைநம்மன்னர்நின்னைப்
பாவாய்ப்பணியவும்பார்க்கிலைநீயிடப்பாகமங்கை
தாவாதசங்கரன்கங்கைதன்கொங்கைதழீஇயிதழிப்
பூவார்சடைமுடிமேல்வைத்தபோதும்பொறுத்தனளே ௩௭௧

தலைமகள்புலவிதணியாளாகத்தலைமகனூடல்

தழங்கார்புனல்வையைசூழ்தஞ்சைவாணன்றனதருள்போற்
பழங்காதலென்னலென்னபடினெஞ்சேயிவள்பண்டுணைபம்பொற்
கழங்காடிடமுங்கடிமலர்க்காவுங்கடந்துபுள்ளும்
வழங்காவழிநடக்கோர்துணையாய்வந்தமானல்லளே ௩௭௨

பாங்கியன்[illegible]லைகொடியையெனத்தலைவனைப்புகழ்தல்

மைந்நாண்மலர்க்கொ[illegible]டைவாணன்றென்மாறையெம்மன்னவருந்
தந்நாண்முயங்கியமிழ்தெனவார்ந்தனிரார்வமுற்று
முந்நாண்மதிவட்டமென்முலைமாதைமுனிந்துநஞ்[illegible]சென்
றிந்நாண்மிகவுவர்த்தீர்புலவாதிற்றிரெங்களையே ௪௱௩

ஆயிழைமைந்தனுமாற்றாமையும்வாயில்களாகவரவெதிர்கோடல்.

வெள்ளம்பரந்தன்னவேட்கைசென்றாலுமிகப்பெரியோ
ருள்ளஞ்சிறியவர்மேற்செல்வரோவொளிர்கோமளஞ்செய்
வள்ளங்கமலமலர்த்தஞ்சைவாணன்றென்மாறையன்னப்
புள்ளம்புனல்வயலூரபுன்காமம்புகல்வதன்றே ௪௱௪

மணந்தவன்போயபின் வந்தபாங்கியோ
டிணங்கியமைந்தனையினிதிற்புகழ்தல்

இருமையிலேயும்பயன்களெல்லாந்தன்னையின்றநமக்
கொருமையிலேவந்துறத்தகைந்தான்மைந்தனெண்சுடர்போல்
வருமயிலேகொண்டுமாசடிந்தானன்னவாணன்றஞ்சைத்
திருமயிலேயன்னையாய்புனலூரனைத்தேருடனே ௪௱௫

தலைவிதலைவனைப்புகழ்தல்

கொண்டானிற்றுன்னியகேளீர்மற்றில்லைக்குறிப்பினென்று
தண்டாதவர்சொன்னசால்புகண்டேன்றலைமேம்புரக்கும்
வண்டார்மலர்ப்புயன்வாணன்றென்மாறைமகிழ்நர்முன்னு
ளுண்டாகியபழங்கேண்மையினாளுமொழிந்திலரோ ௪௱௬

பாங்கிமனைவியைப்புகழ்தல்

சிறந்தார்புகழ்தருந்தீம்புனலூரன்செய்தீமையெல்லா
மறந்தார்வமெய்திவணங்குநலாவிவள்வாணன்றஞ்சை
மிறந்தாரகையென்னநித்திலம்போலுநெடுங்குலத்திற்
பிறந்தார்நிறைநதகற்போர்வடிவேபெ[illegible]பற்றியளே ௪௱௭

பரத்தையர்பிரிவு-முற்றும்.

ஓதற்பிரிவு—கல்விக்குப்பிரிவுதலைமகனுணர்ந்த
தொழிதலைமகட்குணர்த்தல்.

மல்வித்தகக்கொண்டதோளுடையான்றஞ்சைவாணன்றெல்சீர்
நல்வித்தகன்புவிநாவில்வைத்தோள்வையைநாடனையாய்
கல்வித்தடங்கடனீந்தியகாதலர்கற்றவர்முன்
சொல்வித்தவென்றழலார்சுரம்போகத்துணிந்தனரோ ௪௱௮

தலைமகள்கார்ப்பருவங்கண்டுபுலம்பல்.

யாணர்க்குழன்மொழியேன்செய்குவேன்கல்வியெல்லையெல்லாங்
காணப்பிரிந்தவர்காண்கிலராற்கடன்மேய்ந்துதஞ்சை
வாணர்க்கெதிர்ந்தவர்மங்கையர்போலுமென்வல்லுயிரி
னூணற்பமென்னவெண்ணவருமேகமுருமுடனே ௪௱௯

தலைமகளைப்பாங்கியாற்றுவித்தல்

காதற்கயம்படிந்துன்னெடுகாமக்கனிநுகரா
தோதற்ககன்றவுணர்வுடையோருடைநீருலக

பாதர்க்கமைந்தருள்வாணன்றென்மாறைவரக்கடவ
காதற்கணங்கனையாய்ப்புயலேதுவறிந்தருளே ௩௱௰

ஓதற்பிரிவு-முற்றிற்று.

காவற்பிரிவு—தோழிதலைவன் காவற்பிரிவுணர்த்தல்.

விண்காவல்கொண்டதிலோத்தமைதான்முதன்மெல்லியலார்
கண்காவல்கொண்டருள்பாரிசைக்காவலர்கார்க்கடல்சூழ்
மண்காவல்கொண்டமனத்தினராயினர்வாணன்றஞ்சைப்
பண்காவல்கொண்டமொழிச்செய்யவாயிதழ்ப்பைங்கிளியே ௩௱௰௧

தலைமகள்கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்

மன்னுயிர்காவலன்வாணன்றென்மாறையில்வந்துளியா
ரொன்னுயிர்காவலரேநிழையாயிதப்புலர்த்திக்
கொன்னுயர்வாடைக்கொடும்பனிநீரிற்குளிர்குழைத்துப்
பின்னுயிராமலெனமேற்பூசுநாளுமென்பேசுவதே ௩௱௰௨

தோழியாற்றுவித்தல்

வரற்காலமென்றென்றெனப்பலகூடல்வளைத்துகிரம்
விரற்காலவின்றுமெலியன்பின்னேசென்றுமேதினிகாத்
துரற்காலகுஞ்சரமஞ்சமஞ்சூர்ந்துறைவீசுகின்ற
சரற்காலம்வந்தடைந்தார்தஞ்சைவாணன்றமிழ்வெற்பரே ௩௱௰௩

காவற்பிரிவு-முற்றிற்று.—தூதிற்குப்பிரிவு

தலைமகனுணர்ந்த-தோழிதலைமகட்குணர்த்தல்

தூதாகவன்பர்செலத்துணிந்தாரென்றுஞ்சொற்புலவோர்
மாதாகவன்பசிதீர்த்தருள்வாணன்றென்மாறையினது
மீதாகவம்புகிடந்தனபோலுங்கண்மெல்லியலிப்
போதாகவம்புகலவோரிகலார்தம்புரப்புகவே ௩௱௰௪

தலைவிமுன்பனிப்பருவங்கண்டுவருந்தல்

மலிகின்றவண்புகழ்வாணன்றென்மாறையைவாழ்த்தலர்போன்
மெலிகின்றசிந்தையுமேனியுங்கொண்டுவிளர்ப்பெனும்பேர்
பொலிகின்றகஞ்சுகம்போர்த்திருந்தேனைப்புரந்தருளார்
நலிகின்றமுன்பனிநாளினண்ணார்முனைநண்ணினரே ௩௱௰௫

தோழியாற்றுவித்தல்

சுற்றுங்குழலின்பிணிவிடுப்பான்வந்துதோன்றினர்பார்
முற்றும்பொழிகின்றமுன்பனிநாண்முகிலுங்கடலும்
வற்றும்பருவத்துமண்புரப்பான்றஞ்சைவாணனென்னார்
செற்றும்படையின்வெம்போர்தணிப்பானன்றுசென்றவரே ௩௱௰௬

தூதிற்பிரிவு - முற்றிற்று—துணைவயிற்பிரிவு.

துணைவயிற்பிரிந்தமைதோழிதலை மகட்குணர்த்தல்

நண்பானமன்னர்க்கிடர்தணிப்பானெண்ணிநல்லுதவிப்
பண்பானமன்னர்படர்தலுற்றார்பனிநீர்பொழியுந்
தண்பானலந்தொடையும்புயவாணன்றமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பானலங்கொள்செவ்வாயன்னமேயன்னமென்னடையே ௩௱௰௭

தலைமகள் பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்

இன்னற்படுகின்றவென்னையெண்ணாதஞ்சுகின்றுணையா
மன்னற்குதவிபிரிந்தநங்காதலர்வாணன்றஞ்சைக்

கன்னற்கடிகைய[illegible]ல்லாற்பகல்காண்பரிதாம்
பின்னற்கணையிருள்சேர் துன்பமேவியபின்பனியே ௪௱௰௮

தோழியாற்றுவித்தல்

வடுக்கண்டனைய நண்மங்கைநல்லாய்தஞ்சைவாணன்வெற்பி
னடுங்கங்குளிரவசைகின்றவாடையகன்றவர்க்கு
நடுக்கஞ்செய்பின்பனிநாளின்வந்தாரமர்நண்பனுற்ற
விடுக்கண்களையவென்றேயகன்கானமிகந்தவரோ ௪௱௰௯

துணைவயிற்பிரிவு-முற்றும்.

பொருள்வயிற்பிரிவு—தலைமகனுணர்ந்த
தோழிதலைமகட்குணர்த்தல்

மஞ்சைப்புனைமதின்மாளைவரோதயன்வாணர்பிரான்
றஞ்சைப்பதியண்ணலெண்ணலர்போற்றனிநாமிருக்க
நெஞ்சைப்பொருள்வயின் வைத்துநங்கேள்வர்நன்னீண்மதியின்
பிஞ்சைப்புனைநுதலாய்பிரிவானினைபேசினரோ ௪௱௨௰

தலைவியிளவேனிற்பருவங்கண்டு புலம்பல்

நங்களிரங்கவரும்பொருடேடநடந்தவன்பர்
செங்கணிருங்குயிலார்ப்பதுகேட்கிலர்செந்தமிழோர்
தங்கணிடும்பைதவிர்த்தருள்வாணன்றென்றஞ்சைவஞ்சி
திங்கணிவந்துபோற்கவிஞர்முகததேமொழியே ௪௱௨௰௧

தலைவியைத்தோழியாற்றுவித்தல்.

வார்த்தனபாரமடமயிலேகுயின்மாருதமாந்
தேர்த்தனிவீரன்விருநாளுநம்வந்ததுசேர்மின்சென்றீர்
தார்த்தடமேருவெனும்புயவாணன்றஞ்சாபுரிநின்
றூர்த்ததுகேட்டுவந்தார்பொருடேடவகன்றனரோ ௪௱௨௰௨

பொருள்வயிற்பிரிவு-முற்றும்

தலைமகன்றலைமகளதுருவுவெளிப்பாடுகண்டுசொல்லியது

மைக்குஞ்சரனிரையாற்றஞ்சைவாணன்மருவலரைக்
கைக்குங்களங்கெழுபாசறையூடுகயலும்வில்லு
மொய்க்குஞ்சுடரிளவம்பலிதானுமுயங்கியெல்லாந்
திக்குந்தொழவருமேசுருளோலைத்திருமுகமே ௪௱௨௰௩

பாசறைமுற்றி மீண்டூர்வயின்வந்த
தலைவன்பாகற்குச் சொல்லியது

மால்கொண்டவாரணவாணன்றென்மாறைவலவநண்ணார்
கால்கொண்டவாளமர்கைபகல்பாசறைக்கைவயிருட்
கோல்கொண்டவாறுநின்னேவல்கொண்டியானிக்கொடிநெடுந்தேர்
மேல்கொண்டவாறுநம்மூர்வந்தவாறும்வியப்பெனக்கே ௪௱௨௰௪

தலைமகளோடிருந்ததலைமகன்கார்ப்பருவங்
கண்டு மகிழ்ந்துசொல்லியது

கொத்தலரோதிநங்கொம்பரன்னாள்பொங்குகொங்கைவிம்ம
முத்தலராகமுயங்கினம்யாமுழுநீர்விழிபோன்
மைத்தலர்நீலமலர்வயல்சூழ்தஞ்சைவாணன்வண்மைக்
கைத்தலமானவினிப்பொழிவாழியகார்முகிலே ௪௱௨௰௫

தஞ்சைவாணன்கோவை-முற்றிற்று.